RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 29 செப்டம்பர் 2023 இதழ்:- 20

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## கொட்டும் மழைக்கு மத்தியில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் திலீபன் நினைவேந்தலில் பங்கேற்பு!

தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நல்லூரில் உள்ள நினைவிடத்தில் கொட்டும் மழைக்கும் மத்தியில் இடம் பெற்றது. யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் இடம் பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் தியாக தீபத்தின் உயிர் பிரிந்த நேரமான காலை 10.48 மணிக்கு மூன்று மாவீரர்களின் தாயும் நாட்டு பற்றாளரின் மனைவியுமான திருமதி வேல்முருகன் பொதுச்சுடர் ஏற்றினார். அதனை தொடர்ந்து தியாக தீபத்தின் உருவ படத்திற்கு(3ம் பக்கம் பார்க்க)



BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd, Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund




## புலனாய்வுத்துறை - சட்டமாஅதிபர் சிங்கள அரசியல்வாதிகளின் தொடர்ச்சியான கொலை மிரட்டல் அழுத்தம், இனவெறிப் பேச்சு

## நீதிபதி பதவியைத் துறந்து நாட்டை விட்டு வெளியேறினார் முல்லைத்தீவு நீதிபதி

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## இலங்கையின் மனிதஉரிமை மீறல்கள்- பொறுப்புக்கூறல் ஐ.நா. பொதுச்சபையை நோக்கி நகர்கிறதா?அமெரிக்கா கரிசனை!

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4



இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பாகவும், இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தினையும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை நோக்கி நகர்த்துவதற்குரிய அடுத்தகட்டச் சாத்தியப்பாடுகள் தொடர்பில் அமெரிக்கா தீவிரமான கரிசனையுடன் ஆராய்ந்து வருகிறது. குறிப்பாக இலங்கையில் உள்ள அமெரிக்க தூதுவர் ஜூலி சங் மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் தெற்கு மற்றும் ஆசிய விவகாரங்களுக்கான பிரிவினர், ஆசிய விவகாரங்களுக்கான பாதுகாப்பு பிரிவினர், செனட் குழுவின் வெளிவிவகார பிரிவினர் ஆகியோர் (4ம் பக்கம் பார்க்க)

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



## Siva Kandiah

Sales Representative

**Dir: 416-301-9540**

sivakandiahhome@gmail.com

Team SIVA

WILL BRING THE BEST RESULTS!

## Piravien Siva

B.Comm. Sales Representative

**Dir: 647-221-5220**

piravien@gmail.com



20 Years Real Estate Experience

HomeLife Today Realty Ltd.,

Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS


Bus: 416.298.3200

11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7

NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Simcoe St N & Conlin Rd



**Oshawa** **$314,900**

Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University


### Tecumesh Rd E & Hall Ave



**Windsor** **$349,000**

Bedrooms: 3+3 Washrooms: 4
Perfect For Investors


### Markham & Eglinton



**Scarborough** **$529,900**

Bedrooms: 2 Washrooms: 2
Location!! Location!! Location!

### Dundas/Hurontario St



**Mississauga** **$599,000**

Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building

### Bramalea Rd & Queen St



**Brampton** **$590,000**

Bedrooms: 3+1 Washrooms: 2
Finished Basement

### Lawrence & Morningside



**Scarborough** **$629,900**

Bedrooms: 3 Washrooms: 1
Townhouse W/Large living area

### York St / Bremmer Blvd



**Toronto** **$610,000**

Bedrooms: 1+1 Washrooms: 1
Easy Access To Union Station

### Markham Rd & Denison



**Markham** **$635,999**

Bedrooms: 1+1 Washrooms: 1
Low Maintenance Fees.

### Taunton & Ritson



**Oshawa** **$699,000**

Bedrooms: 3+1 Washrooms: 3
Upgraded floors throughout the home

### Main St. E & Russell St.



**Southgate** **$999,000**

Bedrooms: 4 Washrooms: 3
3063 Sq Ft Bright & Spacious Home

### Meadowvale & 401



**Scarborough** **$995,000**

Bedrooms: 3+2 Washrooms: 2
Brand New Entertainment Enclosure

### Brimley Rd / St. Clair Ave



**Scarborough** **$1,224,900**

Bedrooms: 3+1 Washrooms: 4
All Renovated Washrooms

### Meadowvale / 401



**Scarborough** **$1,799,995**

Bedrooms: 4+3 Washrooms: 5
Extensively Renovated

### Bayview & Major Mac



**Richmond Hill** **$1,499,900**

Bedrooms: 3+1 Washrooms: 4
Lots Of Upgrades!

### 9th Line/14th Ave



**Markham** **$1,799,000**

Bedrooms: 4+1 Washrooms: 4
Newly Renovated Luxury Home

### Commercial/Retail




**Grey Highlands** **$7,200,000**

Dollarama And Tim Hortons.
Newly Built Tim Hortons Building

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**


# கொட்டும் மழைக்கு மத்தியில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் திலீபன் நினைவேந்தலில் பங்கேற்பு!

தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுநல்லூரில் உள்ள நினைவிடத்தில் கொட்டும் மழைக்கும் மத்தியில் இடம் பெற்றது. யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் இடம் பெற்ற நினைவேந்தல் நிகழ்வில், தியாக தீபத்தின் உயிர் பிரிந்த நேரமான காலை 10.48 மணிக்கு மூன்று மாவீரர்களின் தாயும் நாட்டு பற்றாளரின் மனைவியுமான திருமதி வேல்முருகன் பொதுச்சுடர் ஏற்றினார். அதனை தொடர்ந்து தியாக தீபத்தின் உருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை சம நேரத்தில் நல்லூர் வடக்கு வீதியில் திலீபன் உண்ணாவிரதம் இருந்த இடத்திலும், நினைவிடத்திற்கு அருகில் உள்ள திலீபனின் ஆவண கண்காட்சி கூடத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. அத்துடன் இரண்டு தூக்கு காவடிகள் நினைவிடத்திற்கு வந்ததுடன், யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நினைவிடத்திற்கு 06க்கும் மேற்பட்ட ஊர்தி பவனிகள் வந்திருந்தன.

நினைவு சுடர் ஏற்றுவதற்கு சுமார் அரை மணி நேரத்திற்கு முன்பாக கடும் மழை பொழிய ஆரம்பித்த போதிலும் மழையையும் பொருட்படுத்தாது நினைவிடத்தில் கூடி இருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

1987ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி தியாக தீபம் திலீபன் ஐந்தம்ச கோரிக்கைகளை முன் வைத்து நல்லூர் ஆலய வீதியில் நீராகாரம் இன்றி உண்ணாவிரதம் இருந்தார். அவரது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் 12 நாட்களில் அவரது உயிர் பிரிந்தது.

### குழப்ப முயன்ற பொலிசார்

இதேவேளை தியாக தீபம் திலீபன் நினைவிடத்தில் மக்கள் அஞ்சலி செலுத்திக் கொண்டு இருந்தமையால், அவ் வீதி ஊடான போக்குவரத்தினை மாற்று வீதி வழியாக மாற்றி போக்குவரத்து ஒழுங்குகளை செய்தவர்களை பொலிஸார் மிரட்டி அஞ்சலி நிகழ்வு இடம் பெறும் இடத்தின் ஊடாக போக்குவரத்தினை மேற் கொள்ள வாகனங்களை அனுமதித்தனர்.

அத்துடன் தாமும் பொலிஸ் வாகனத்தில் அஞ்சலி நிகழ்வு இடம் பெறும் பகுதியில் சுற்றி திரிந்து நிகழ்வுகளில் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சித்துடன் மக்கள் நெரிசல் காணப்பட்ட இடத்தினால் வாகனத்தை செலுத்தி மக்கள் மத்தியில் பயத்தினை ஏற்படுத்த முயன்றனர்.


தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வின் இறுதி நாள் யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் நல்லூர் ஆலயத்திற்கு அருகில் உள்ள திலீபனின் நினைவிடத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம் பெற்றது. கொட்டும் மழைக்கு மத்தியில் ஆயிரக்கணக்கான



மக்கள் நினைவிடத்தில் கூடி அஞ்சலி செலுத்தினர். அதனால் நினைவிடத்தை அண்மித்த வீதியில் பெருமளவான மக்கள் காணப்பட்டமையால் , குறித்த வீதி ஊடாக வந்த வாகனங்களை மாற்று வீதியூடாக செல்ல அங்கிருந்த சிலர் வழி வகுத்தனர்.

அவ்வேளை அங்கு வந்த பொலிஸார் போக்குவரத்தை மக்கள் குவிந்துள்ள வீதி ஊடாகவே மேற்கொள்ளுமாறு வாகன சாரதிகளுக்கு பணித்ததுடன் , அங்கிருந்து போக்குவரத்து ஒழுங்குகளை செய்த இளைஞர்களையும் அவ்விடத்தில் இருந்து அச்சுறுத்தி அகற்றி இருந்தனர். இருந்த போதிலும் பெரும்பாலான சாரதிகள் தாங்களாகவே அஞ்சலி நிகழ்வு இடம்பெறும் வீதியை தவிர்த்து மாற்று வீதி வழியாக தமது பயணத்தை மேற்கொண்டனர்.

# அமெரிக்காவில் உலகின் மிகப்பெரிய இந்துக்கோவில்



இந்தியாவுக்கு வெளியே கட்டப்பட்ட உலகின் மிகப் பெரிய இரண்டாவது அக்ஷர்தாம் என்ற இந்துக் கோயில் அக்டோபர் 8ஆம் திகதி திறக்கப்படவுள்ளது. இக்கோவில் கடந்த 2011ம் ஆண்டு முதல் 2023ம் ஆண்டு வரையில் சுமார் 12 ஆண்டுகளாக அமெரிக்கா முழுவதிலும் இருந்து 12,500க்கும் மேற்பட்ட தன்னார்வலர்களால் கட்டப்பட்டு உள்ளது.

இந்த கோயில் நியூயார்க் டைம்ஸ் சதுக்கத்தில் இருந்து 60 மைல்கள் தெற்கேயும், வாஷிங்டன் நகருக்கு 180 மைல் வடக்கேயும் அமைந்துள்ளது. 183 ஏக்கரில் பரந்த விரிந்துள்ள இந்த கோயில் பண்டைய இந்து வேதங்களின் படி வடிவமைக்கப்பட்டு உள்ளதுடன் கோயில் முழுவதும் 10 ஆயிரம் சிலைகள் மறறும் இந்திய இசை கருவிகள் மற்றும் நடன வடிவங்கள் செதுக்கப்பட்டு இந்திய கலாச்சாரத்தின் வடிவமைப்பை கொண்டுள்ளது. மேலும் 12 துணை கோயில்கள், ஒன்பது ஷிகர்கள்(கோபுரங்கள்) மற்றும் ஒன்பது பிரமிடுஷிகர்களை கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

கட்டுமானத்தில் நான்கு வகையான கற்களில் சுண்ணாம்பு, இளஞ்சிவப்பு மணற்கல், பளிங்கு மற்றும் கிரானைட் உள்ளிட்ட இரண்டு மில்லியன் கன அடி கல் பயன்படுத்தப்பட்டது. பல்கேரியா மற்றும் துருக்கியில் இருந்து சுண்ணாம்புக்கல்,கிரீஸ், துருக்கி, இத்தாலியில் இருந்து பளிங்கு் இந்தியா மற்றும் சீனாவில் இருந்து கிரானைட் இந்தியாவில் இருந்து மணற்கல் மற்றும் ஐரோப்பா, ஆசியா, லத்தீன் அமெரிக்காவிலிருந்து பிற அலங்கார கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவின் புனித நதிகள் மற்றும் அமெரிக்காவின் 50 மாநிலங்கள் உட்பட, உலகம் முழுவதிலுமிருந்து 300 க்கும் மேற்பட்ட நீர்நிலைகளிலிருந்து நீரைக் கொண்டுள்ளது. அக்ஷர்தாம் அக்டோபர் 8 ஆம் திகதி டீயீளூ ஆன்மீக தலைவர் மஹந்த் சுவாமி மகராஜ் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் முறையாக திறக்கப்படும்.


## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# இலங்கையின் மனிதஉரிமை மீறல்கள்- பொறுப்புக்கூறல் ஐ.நா. பொதுச்சபையை நோக்கி நகர்கிறதா?அமெரிக்கா தீவிர கரிசனை!

இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பாகவும், இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தினையும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை நோக்கி நகர்த்துவதற்குரிய அடுத்தகட்டச் சாத்தியப்பாடுகள் தொடர்பில் அமெரிக்கா தீவிரமான கரிசனையுடன் ஆராய்ந்து வருகிறது.

குறிப்பாக இலங்கையில் உள்ள அமெரிக்க தூதுவர் ஜூலி சங் மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் தெற்கு மற்றும் ஆசிய விவகாரங்களுக்கான பிரிவினர், ஆசிய விவகாரங்களுக்கான பாதுகாப்பு பிரிவினர், செனட் குழுவின் வெளிவிவகார பிரிவினர் ஆகியோர் இந்த விடயம் சம்பந்தமாக கரிசனைகள் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ‘இலங்கையில் மீளிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் ஆகியவற்றை முன்னேற்றுதல்’ என்ற தலைப்பிலான 51-1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதன் ஆயுட்காலம் அடுத்த ஆண்டு நிறைவுக்கு வரவுள்ள நிலையில் அதற்கு அப்பால் மீண்டும் தீர்மானமொன்றை கொண்டு வருவதற்கு பதிலாக இலங்கை விடயத்தினை ஐ.நா. பொதுச்சபைக்கு பாரப்படுத்தி ஆகக் குறைந்தது ஐ.நா.செயலாளர் நாயகத்தின் விசேட கரிசனையின் கீழ் கலந்துரையாடுவதற்கான சூழலொன்றைத் தோற்றுவிப்பது பற்றி கவனம் செலுத்தப்பட் வருகின்றது.

இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரின் போதும், அசாதாரண காலத்தின் போதும், மீறப்பட்ட மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினை பொறுப்புக்கூறச் செய்வதற்காக போர் முடிவுக்கு வந்த சூழலில் 2012ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை



கள் பேரவையில் அமெரிக்கா, ‘இலங்கையில் மீளிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் ஆகியவற்றை முன்னேற்றுதல்’ எனும் தலைப்பில் அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் முதற்தடவையாக நிறைவேற்றப்பட்டது.

இதனையடுத்து அமெரிக்கா, தொடாச்சியாக இலங்கை பற்றிய தீர்மானங்களின் ஆயுட்காலங்களுக்கு அமைவாக தீர்மானங்களை முன்னகர்த்தி வந்திருந்த போதும் பேரவையின் உறுப்புரிமையை அமெரிக்கா இழந்தமையால் இறுதியாக 51ஆவது கூட்டத்தொடரில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தினை பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகள் சமர்பித்து நிறைவேற்றியிருந்தன.

இந்நிலையில், இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக குறித்த தீர்மானத்தினை நிராகரித்து வருவதாக அறிவித்து வரும் நிலையில், மேற்படி தீர்மானத்தின் ஆயுட்காலம் நிறைவுக்கு வருகின்ற போது மீண்டும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் முன்னகர்த்தப்படுவது பொருத்தமானதாக அமையுமா என்ற கோணத்தில் பல்வேறு கலந்துரையாடல்கள் அமெரிக்காவினால் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற தரப்புக்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்கள் நாடுகளை கட்டுப்படுத்தும் வல்லமையை கொண்டிருக்காததன் காரணத்தில் அதற்கப்பால் செல்வதற்கான முயற்சிகளை அமெரிக்காவே முன்னின்று எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளன.

முதற் கட்டமாக, இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தினை ஐ.நா.பொதுச்சபைக்கு பாரப்படுத்தி அதில் கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகளை ஐ.நா.செயலாளர் நாயகம் ஊடாக முன்னெடுப்பதை நோக்கி நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த விடயத்தினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக, இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் மற்றும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் முக்கிஸ்தர்கள் தற்போதிருந்தே தீவிர கவனம் செலுத்துவதற்கு ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இனவெறியன் சரத் வீரசேகரவுக்கு விசா வழங்க அமெரிக்கா இழுத்தடிப்பு?

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொள்வதற்கான விசாவை வழங்குவதை அமெரிக்க தூதரகம் தாமதிப்பதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அடுத்த மாதம் அமெரிக்கா செல்லவுள்ள இலங்கை நாடாளுமன்ற குழுவில் இடம் பெற்றுள்ள சரத் வீரசேகரவிற்கு விசா வழங்க முடியாது அவருக்கு பதில் சிறுபான்மை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை நியமியுங்கள் என அமெரிக்கா, நாடாளுமன்றத்திற்கு தெரிவித்துள்ளதால் சர்ச்சை மூண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற சபாநாயகருக்கு கடிதமொன்றை எழுதவுள்ளதாக சரத் வீரசேகர தெரிவித்துள்ள நிலையில் இது குறித்து சபாநாயகர் அமெரிக்க தூதுவரிடம் விளக்கமொன்றை பெறுவார் என நம்புவதாகவும் தெரிவித்தார்.




மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிக்கு எதிராக கடந்த வருடம் இலங்கையில் இடம் பெற்ற மக்கள் எழுச்சியில் (15ம் பக்கம் பார்க்க)




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதேவேளை நாளாந்தம் வழமை போன்று பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருவதுடன் அம்பாளின் திருப்பணிக்கு உங்களால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# அமெரிக்கத் தூதுவர் - சுமந்திரன் சந்திப்பில் 3 முக்கிய விடயங்கள் குறித்து எடுத்துரைப்பு!



உள்நாட்டில் தொடரும் ஊழல், நீதிபதிகளை அச்சுறுத்தி நீதித்துறை மீதான அடைக்குமுறை, அரசியலமைப்பில் உள்ளவற்றையே நடைமுறைப்படுத்தாது நீடிக்கும் அதிகாரப்பகிர்வு இழுத்தடிப்பு சம்பந்தமாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிடத்தில் எடுத்துரைத்துள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் வெளிவிவகாரங்களுக்கான செயலாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கான விஜயத்தினை நிறைவு செய்து நாடு திரும்பியவுடன் இலங்கைகக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கின் அழைப்பின் பேரில் சந்திப்பொன்றை சுமந்திரன் எம்.பி நடத்தியிருந்தார். குறித்த சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்காவுக்கான விஜயத்தினை நிறைவு செய்து நாடு திரும்பியிருந்த நிலையில், அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கின் அழைப்பின் பேரில் சந்திப்பொன்றை நடத்தியிருந்தேன். இதன் போது முக்கியமாக மூன்று விடயங்கள் சம்பந்தமாக பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

முதலாவதாக, தொடர்ச்சியாக ஊழல்மோசடிகள் நடைபெறுவதோடு, ஏற்கனவே நடைபெற்ற பாரிய ஊழல் மோசடிகள் பற்றிய விசாரணைகள் முன்னெடுக்கப்படாமை மற்றும் விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படாமை உள்ளிட்ட விடயங்கள் என்னால் எடுத்துரைக்கப்பட்டன.

இரண்டாவதாக, நாட்டின் நீதித்துறை மீது, நிறைவேற்று அதிகாரத்துறையான ஜனாதிபதியும், சட்டவாக்கத்துறையும் அடக்குமுறையை பிரயோகித்து சுயதீனத்தன்மையை மறுதலிக்கின்ற விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. குறிப்பாக, நீதிபதிகள் சிறப்புரிமைகளின் பெயரால் அச்சுறுத்தப்படுகின்றமை, கடுமையாக எதிர்மறையாக விமர்சிக்கப்படுதல் உள்ளிட்ட விடயங்கள் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டன.

மூன்றாவதாக தமிழ் மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பாக உள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வினை முன் வைக்கும் விடயத்தில் அதிகாரப்பகிர்வு சம்பந்தமான உரையாடல்களை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்திருந்தாலும், அவர் காலத்தினை இழுத்தடிக்கும் செயற்பாட்டினையே முன்னெடுக்கின்றார். குறிப்பாக, அரசியலமைப்பில் அதிகாரப்பகிர்வு தொடர்பான விடயம் உள்ளடக்கப்பட்டுள்ள போதும், அதனை மீண்டும் பாராளுமன்ற அனுமதிக்காக கொண்டு செல்கின்ற செயற்பாடுகளையே முன்னெடுக்கின்றார் என்கின்ற விடயமும் எடுத்துக் கூறப்பட்டது.

இதனை விடவும், தமிழ் மக்களின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் காணப்படுகின்ற தற்போதைய நிலைமைகள் தொடர்பிலும் விரிவாக தெளிவுபடுத்தாப்பட்டது. இச்சமயத்தில் அமெரிக்கத்தூதுவர் அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் விசேடமான கரிசனைகளை கொள்வதாக நம்பிக்கை அளித்துள்ளார் என்றார்.

# பொது நினைவுச் சின்னம் அமைப்பதை சிங்களப் பேரினவாதம் உயிரோடு இருக்கும் வரை தமிழினம் அனுமதிக்காது!



ஜனாதிபதி செயலகம் போரில் இறந்த இராணுவத்தினர், விடுதலைப் போராளிகள், பொதுமக்கள் ஆகிய முத்தரப்பினருக்கும் பொதுவான நினைவுச்சின்னம் ஒன்றை அமைப்பதாக முடிவெடுத்து அதனை விரைவில் நிறுவுவதற்கான தீவிர முயற்சியில் இறங்கியுள்ளது. இது தொடர்பாக அரசதரப்பால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த சனிக்கிழமை கலந்துரையாடலொன்றை நிகழ்த்தியுள்ளது.

தமிழர் தாயகத்தின் ஏனைய மாவட்டங்களிலும் இக் கலந்துரையாடல் தொடர்ந்து இடம் பெறவுள்ளது. ஆனால், அரசதரப்பு எத்தகைய தீவிரங்காட்டினாலும் போரில் உயிரிழந்த அனைவருக்கம் பொதுவான நினைவுச்சின்னம் ஒன்றை அமைப்பதற்குப் பேரினவாதம் உயிரோடிருக்கும் வரை தமிழினம் அனுமதியாது. என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிச் செயலகம் போரில் உயிர்நீத்தவர்களுக்கான பொதுநினைவுச் சின்னமொன்றை அமைக்க முற்பட்டிருப்பது தொடர்பாக பொ.ஐங்கரநேசன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கியநாடுகள் சபையின் மனிதஉரிமைகள் ஆணையத்தின் தீர்மானத்துக்கமைவாக நல்லாட்சி அரசாங்கம் தான் ஏற்றுக் கொண்ட நிலைமாறுகால நீதிப் பொறிமுறையின் கீழ் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விதமாகப் போரில் உயிர்நீத்தவர்களுக்கான பொது நினைவுச் சின்னமொன்றை அமைப்பதற்கு முடிவெடுத்திருந்தது. போராளிகளையும் பொதுமக்களையும் அவர்களைக் கொன்றொழித்த படைத்தரப்பையும் ஒன்றாக நினைவிற் கொள்ளும் இம்முடிவிற்குத் தமிழ் மக்கள் அப்போதே தமது எதிர்ப்பை வெளிக்காட்டியிருந்தார்கள்.

இவ்வெதிர்ப்பைக் கருத்தில் கொள்ளாது, அதனை எவ்வடிவத்தில் அமைப்பது என்பது தொடர்பான கலந்துரையாடல் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இக்கலந்துரையாடல் பொது அழைப்பும் ஊடகங்களின் பங்கேற்பும் இல்லாது நிபுணர்குழு தெரிவுசெய்து அழைத்திருந்த மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினருடன் மட்டுமே இடம்பெற்று வருகின்றது.

போர்முடிவுற்று பதின்னான்கு வருடங்கள் கடந்து விட்ட போதிலும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான எந்தவொரு ஆக்கபூ ர்வ சமிக்ஞையினையும் அரசதரப்பு வெளிக்காட்டவில்லை. போர்மரபுகளையும் மீறி மாவீரர் துயிலுமில்லங்களைச் சிதைத்தழித்த அரசதரப்பு, யுத்த வெற்றியைப் பறைசாற்றும் விதமாகப் படைத்தரப்பினருக்கான நினைவுச் சின்னங்களைத் தமிழர்தாயகப் பகுதியெங்கும் அமைத்துள்ளது. ஆனால், அகிம்சை வழியில் போராடி உயிர்துறந்த திலீபனின் நினைவு கூருதலை சிங்களக் குண்டர்களின் மூலமும், தனது ஏவல்துறையான காவல் துறையின் மூலமும் குழப்பி வருகின்றது.

திலீபனின் நினைவேந்தல் நாட்களிலேயே இன நல்லிணக்கத்தின் பெயரால் பொது நினைவுச் சின்னமொன்றை அமைப்பதற்கான கலந்துரையாடலையும் நிகழ்த்துகிறது. உலகை ஏமாற்றும் அரசாங்கத்தின் இந்நிகழ்ச்சி நிரலுக்குத் தமிழ்மக்கள் ஒருபோதும் ஒப்புதல் வழங்கமாட்டார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# இவர்களுக்காக....





என் இனிய கனடா வாழ் கருணையாளர்களே!

திக்குத் திசை தெரியாது போரின் பேரழிவின் போது சிக்கித் தவித்த 86 குழந்தைகளோடு 13 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லம், பாரதி இல்லக் குழந்தைகளுக்கு கடந்த 12 ஆண்டுகளாக உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை ஊடாக கனடியத் தமிழ் சமூகம் ஆகிய நீங்கள் வழங்கி வருகின்ற மகத்தான ஆதரவினால் இன்று 436 குழந்தைகளின் நாளாந்த உணவுத் தேவைகளும் கல்வி மேம்பாடும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமை காரணமாக பாரிய நெருக்கடியை எமது இல்லங்களும் எதிர் நோக்கியுள்ள நிலையில் அவர்களது இடர்களைக் களையவும் கல்வியை மேம்படுத்தவும் எதிர்வரும் 29 ஒக் 2023 ஞாயிற்றக் கிழமை நடைபெற்றவுள்ள ஊட்டும் கரங்கள் நிகழ்வுக்கு வருகை தந்து உங்கள் ஆதரவைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன் (விபரங்கள் 12ம் 13ம் பக்கம் பார்க்க)

வெறுமனே களியாட்ட நிகழ்வுகளுக்கும் தனி மனித புகழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பங்களிப்பை நல்காது தேச விடுதலைப் போரின் போது உயிர்த் தியாகம் செய்தவர்களது குழந்தைகளை வாழ வைக்கும் பணியில் இணைந்து கொள்ளுங்கள்.

நீங்கள் வழங்குகின்ற ஒவ்வொரு டொலர்களும் அந்தக் குழந்தைகளின் வாழ்வுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கும். நாம் வாழும் கனடிய மண்ணிலும் அனைத்துமே விலை யேற்றம் கண்டுள்ளமையால் எமது நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் தேச அபிமானிகள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

விழாவில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்களால் முடிந்தளவு பங்களிப்பை எம்முடன் தொடர்பு கொண்டு வழங்குமாறும் உங்கள் பெயர், விபரங்கள் ஈழநாடு பத்திரிகையிலும் முகநூலிலும் தவறாது வெளிவரும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

எம் தேசத்தின் எதிர்காலச் சந்ததி எம் மண்ணில் நிம்மதியாக சிறப்பாக வாழ வழி சமைப்போம்! வாரீர்!

தொடர்புகளுக்கு

ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# புலனாய்வுத்துறை - சட்டமாஅதிபர் -சிங்கள அரசியல்வாதிகளின் தொடர்ச்சியான கொலை மிரட்டல், அழுத்தம், இனவெறிப் பேச்சு

# நீதிபதி பதவியைத் துறந்து நாட்டை விட்டு வெளியேறினார் முல்லை நீதிபதி

குருருந்தூர்மலை விவகாரம் தொடர்பிலான தீர்ப்பினை அடுத்து எதிர்கொண்டு வந்த அவர் உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாக தான் வகித்து வந்த நீதிபதிப் பொறுப்புக்கள் அனைத்தையும் துறந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜா நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். இது குறித்து அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தவை வருமாறு,

குருந்தூர்மலை வழக்கில் நீதிபதி வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு தொடர்ச்சியாக அரச தரப்பால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மற்றும் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலும், பாராளுமன்றிற்கு வெளியிலும் எனக்கு அச்சுறுத்தல் விடுத்திருந்தனர்.

அண்மையில் எனக்கான (நீதிபதிக்கான) பொலீஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்ட அதேவேளை, புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக என்னைக் கண் காணித்து வந்தனர்.

சட்டமா அதிபர், என்னை (முல்லைத்தீவு நீதிபதியை) தனது அலுவலகத்தில் 21.09.2023ம் திகதி அன்று சந்திக்க வருமாறு அழைத்து, குருந்தூர்மலை வழக்கின் நீதிமன்றக் கட்டளைகளை மாற்றியமைக்கும்படி அழுத்தம் பிரயோகித்தார்.

குருந்தூர் மலை வழக்குடன் தொடர்புபடுத்தி எனக்கு (முல்லைத்தீவு நீதிபதிக்கு) எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் (Court of Appeal) எனது தனிப்பட்ட பெயர் குறிப்பிடப்பட்டு இரண்டு வழக்குகள் கோப்பிடப்பட்டுள்ளன.



இவற்றின் அடிப்படையில் எனக்கு நேர்ந்த உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக நான் மிகவும் நேசித்த எனது நீதிபதிப் பதவிகள் அனைத்தையும் துறந்துள்ளேன்.

இது குறித்த பதவி விலகல் கடிதத்தினை கடந்த 23-09-2023 அன்று பதிவுத் தபால் ஊடாக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளேன் என்று தெரிவித்தார்.

இந்நிலையில், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜா, தன்னுடைய பதவி விலகலை அறிவித்த பின்னர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

## ஸ்ரீதரன் எம்.பி கடும் கண்டனம

குருந்தூர்மலையில் தமிழர்கள் வழிபாடியற்றுவதற்கு, சட்ட வரன் முறைகளுக்கு உட்பட்டு நியாயபூர்வமாக வழங்கப்பட்ட தீர்ப்பினை மாற்றம் செய்யுமாறு சட்டமா அதிபர் மட்டத்தில் பிரயோகிக்கப்பட்ட அழுத்தம் மற்றும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவி விலகியமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நீதிபதி சரவணராஜா பதவி விலகியமை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் இது தொடர்பில் கூறியுள்ளதாவது, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சரவணராஜா அவர்கள், தன்மீது தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டு வந்த அழுத்தங்கள் மற்றும் உயிர் அச்சுறுத்தல்கள் காரணமாக, தனது பதவியையும், பொறுப்புகளையும் துறந்துள்ளமை, இந்த நாட்டின் நீதித்துறையினது சுயாதீன இயங்குநிலையை அடியோடு ஆட்டம் காணச் செய்துள்ளது.

நீதிபதி சரவணராஜா கடந்த 2023.07.04 ஆம் திகதி தனது கடமை நிமித்தம் குருந்தூர்மலைக்கு விஜயம் செய்திருந்தபோது தெரிவித்த கருத்துகளை மேற்கோள்காட்டி 2023.07.07 ஆம் திகதிய நாடாளுமன்ற உரையிலும், அதன் பின்னர் பொது வெளியிலும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை, நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர அவதூறுக்கு உள்ளாக்கியிருந்தார். அதன் பின்னர் குருந்தூர்மலையில் தமிழர்கள் வழிபாடியற்றுவதற்கு, சட்டவரன்முறைகளுக்கு உட்பட்டு நியாயபூர்வமாக வழங்கப்பட்ட தீர்ப்பினை மாற்றம் செய்யுமாறு சட்டமா அதிபர் மட்டத்தில் பிரயோகிக்கப்பட்ட அழுத்தம் மற்றும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவி விலகியுள்ளமை இந்த நாட்டின் நீதித்துறைக்கும், ஜனநாயகத்துக்கும் விழுந்திருக்கிற சாட்டையடி மட்டுமல்ல, இதை மிகமோசமான இனவாதச் செயலாகவே கருதவேண்டியுள்ளது. இதற்கு, எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவிக்கிறேன்.

2000 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியாக இருந்த சிறீநிதி நந்தசேகரன் அவர்கள் மீது, இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொலைமுயற்சியை அடியொற்றி, மீளவும் வடக்கின் தமிழ் நீதிபதி ஒருவர் மீது பகிரங்கமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தகையதொரு உயிர் அச்சுறுத்தல், இலங்கையின் நீதித்துறையின் இயங்கு நிலையும் மெல்லமெல்ல இராணுவமயப் படுத்தப்படுவதற்கான எத்தனமாகவே தென்படுகிறது.

நீதித்துறையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படும் இந்த நாட்டில், இன, மத ஆக்கிரமிப்புகளும், அடக்குமுறைகளும் எத்தனை வீரியமாய் இருக்கும் என்பது பற்றி, சர்வதேச சமூகம் இனியேனும் கூருணர்வோடு செயலாற்ற வேண்டும் இந்த நிலை, இன்னுமோர் தமிழ் நீதிபதிக்கு ஏற்படாதிருக்க வழிவகை செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன் என கூறியுள்ளார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# கனடா பயங்கரவாதிகளின் புகலிடம்! இலங்கையின் இனப்படுகொலை இடம்பெற்றது கனடாப் பிரதமர் ட்ரூடோ பொய் சொன்னாராம்

கனடா பயங்கரவாதிகளின் புகலிட மாக மாறியுள்ளது என நியுயோர் க்கில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள் ளார். ஏஎன்ஐக்கு கருத்து தெரி விக்கையில் அவர் இதனை குறிப் பிட்டுள்ளார்.

கனடா இந்திய இராஜதந்திர முறுகல் நிலை குறித்து கருத்து தெரிவிக்கையில் இதனை தெரி வித்துள்ள அலிசப்ரி உறுதியான ஆதாரங்கள் இன்றி இந்தியாவிற்கு எதிரான குற்றச்சாட்டுகளை முன் வைத்தமைக்காக கனடா பிரத மரை கடுமையாக சாடியுள்ளார்.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஆதாரமற்ற பரபரப்பு குற்றச் சாட்டுகளை முன் வைப்பவர் என்பதால் அவரது கருத்துக்கள் எனக்கு ஆச்சரியமளிக்கவில்லை என அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

சில பயங்கரவாதிகள் கனடாவில் அடைக்கலம் பெற்றுள்ளனர் என குறிப்பிட்டுள்ள அவர் ஆதாரங்கள் அற்ற கடும் குற்றச்சாட்டுகளை முன் வைக்கும் சுபாவம் கனடா பிரதமருக்குள்ளது எனவும் தெரி வித்துள்ளார்.

இலங்கை விவகாரத்திலும் கனடா பிரதமர் அவ்வாறு நடந்து கொண்டார் இலங்கையில் இனப் படுகொலை இடம் பெற்றதாக பெரும் பொய்யை



சொன்னார் இலங்கையில் இனப்படுகொலை இடம் பெறவில்லை என்பது அனைவருக்கும் தெரியும் எனவும் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கனடாவில் சீக்கிய செயற்பாட்டா ளர் ஒருவர் கொல்லப்பட்டமை யின் பின்னணியில் இந்திய அரசாங்கம் உள்ளது என்ற கனட பிரதமரின் குற்றச் சாட்டினால் இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையில் இராஜதந்திர முறுகல் நிலை உருவாகியுள்ள நிலை யிலேயே இலங்கை வெளிவிவகார அமைச்சரின் இந்த கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

# சீக்கியர் படுகொலை:- கனடாவின் விசாரணைகளிற்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - அமெரிக்கா



கனடாவில் சீக்கிய செயற்பாட்டாளர் ஹர்தீப் சிங் நிஜார் கொலை குறித்த விசாரணைகளிற்கு ஒத்து ழைப்பு வழங்கவேண்டும் என இந்தியாவை தனிப் பட்ட ரீதியிலும் பகிரங்கமாகவும் கேட்டுக்கொண்ட தாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்கள பேச்சாளர் மத்தியு மில்லர் செய்தியாளர் மாநாட்டில் இதனை தெரிவித்துள்ளார். கனடாவின் குற்றச்சாட்டுகள் குறித்து முழுமையான விசாரணைகளை மேற் கொள்ள வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறு த்தியுள்ளார்.

கனடா பிரதமர் முன் வைத்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம் நாங்கள் எங்கள் கனடா சகாக்களுடன் இந்த விடயம் தொடர்பில் நெருங்கிய தொடர்பில் உள்ளோம் என வும் அவர் தெரிவித்துள்ளார்.

கனடாவின் விசாரணைகள் தொடர்வதும் குற்றவாளி கள் நீதியின் முன் நிறுத்தப்படுவதும் முக்கியமான விடயம் என அமெரிக்கா கருதுகின்றது கனடாவின் விசாரைணகளிற்கு இந்தியா முழுமையான ஒத்து ழைப்பை வழங்க வேண்டும் என நாங்கள் வெளிப் படையாகவும் தனிப்பட்ட ரீதியிலும் வேண்டுகோள் விடுத்துள்ளோம் என அமெரிக்க இராஜாங்க திணை க்கள பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியாவுடனான தூதரக மோதலால் இரு நாட்டு இராணுவ உறவு பாதிக்காது - கனடா இராணுவ துணைத்தளபதி

இந்தியா கனடா இடையேயான தூதரக மோதல், இரு நாட்டு இராணுவ உறவில் பாதிப்பை ஏற்படுத் தாது என்று இந்தியா சென்றிருந்த கனடா ராணுவ துணைத் தளபதி மேஜர் ஜெனரல் பீட்டர் ஸ்காட் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் இவ்வாரம் தொடங்கிய இந்தோ – பசிபிக் இராணுவத் தலைவர்களின் 3 நாள் மாநாட்டில் கனடா ராணுவத்தின் துணை தளபதி மேஜர் ஜெனரல் பீட்டர் ஸ்காட் பங்கேற்றுள்ளார். மாநாட்டின் இடையே செய்தியாளர்களிடம் பேசிய பீட்டர் ஸ்காட், ஜஸ்டின் ட்ரூடோ என்ன கூறினார் என்பதை நான் நன்கு அறிவேன். நிஜார் கொலை வழக்கில் இந்திய அரசு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று அவர் கோரி இருக்கிறார். ஆனால், இந்த விவகாரம் இந்தோ பசிபிக் மாநாட்டில் எங்களுக்கு எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. இராணுவ ரீதியிலான உறவுகளை மேம்படுத்தவே நாங்கள் இங்கு இருக்கிறோம். அந்தப் பிரச்சினையை அரசாங்கங்கள் அவர்களுக்குள்ளா கவே சமாளித்துக் கொள்வார்கள்.

இந்தோ பசிபிக் இராணுவத் தளபதிகளின் மாநாட்டின் ஓர் அங்கமாக நாங்கள் இங்கு இருப்பதற்கு நன்றி உள்ளவர்களாக இருக்கிறோம். இந்தோ பசிபிக் பிராந் திய நட்பு நாடுகளுடன் பயிற்சி மேற் கொள்வதற்கான வாய்ப்புகளை கனடா எப்போதும் மதிக்கிறது.

இந்த மாநாட்டில் பங்கேற்றிருப்பதன் மூலம் மற்ற நாடுகளின் தலைவர்களைச் சந்திக்கவும், அந்த நாடு களின் ஆர்வங்களை அறிந்து கொள்ளவும் வாய்ப்பு



கிடைத்துள்ளது. இந்த மாநாட்டில் பங்கேற்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். மாநாட்டை நடத்தும் இந்தியாவுக்கு எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தியா கனடா இராணுவங்களுக்கு இடையே பயிற்சிகளை பரிமாறிக் கொள்வது, அனுபவங்களை பரிமாறிக் கொள்வது ஆகியவற்றின் மூலம் இரு நாடுகளும் ஒன்றிடம் இருந்து மற்றொன்று கற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார்.

# காணி அதிகாரம்

மட்டக்களப்பு மாதவணை மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகாரம் தொடர்பில் தன்னால் தலையீடு செய்ய முடியாதென்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கூறியிருக்கின்றார். மகாவலி அதிகார சபைக்கு உட்பட்ட விவகாரம் என்பதால் இந்த விடயத்தில் தன்னால் தலையீடு செய்ய முடியாதென்று ஆளுநர் தெரிவித்திருக்கி ன்றார்.

அவ்வாறாயின் புத்தசாசன அமைச்சுக்கு உட்பட்ட விகாரை விடயத்தில் அவர் எவ்வாறு தலையீடு செய்ய முற்பட்டார் என்னும் கேள்வியுண்டு. இத ற்கு முன்னர் இருந்த சிங்கள ஆளுநர் மட்டக் களப்பு மேய்ச்சல் தரை விடயத்தில் சிங்களவர்களு க்கு சார்பான தலையீடுகளை செய்திருந்தார்.

ஆளுநர் விவகாரத்தை ஒருபுறமாக வைத்து விட்டு இந்த விடயம் எதனை வலியுறுத்துகின்றது என்பதையே நாம் கவனிக்க வேண்டும். அரசமை ப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமை யாக அமுல்படுத்த வேண்டுமென்று தமிழர் தரப்பின் பெரும்பான்மை கோரி வருகின்றது.

ஒரு சிறிய தரப்பு அதில் பயனில்லையென்று வாதி ட்டு வருகின்றது. நிலைமைகளை உற்று நோக்கி னால் வடக்கு கிழக்கை மையப்படுத்தி இடம் பெற்று வருகின்ற விடயங்கள் அனைத்துமே காணி அதிகாரத்துடன் தொடர்புபடுவதை காண லாம்.

விகாரைகள் கட்டப்படுவது தற்போது விவாதிக்கப் படும் மேய்ச்சல் தரை விவகாரம் ஆகிய அனைத் துமே காணி அதிகாரத்துடன் தொடர்புபடு கின்றது. காணியை கையாளுவதற்கான அதிகாரம் மாகாண சபையிடம் இருக்குமாயின், இவ்வாறான பிரச்னைகளை இலகுவாக கையாளக் கூடியதாக இருக்கும். நூறு விகிதம் இல்லாவிட்டாலும் கூட, 70விகித பிரச்னையை கையாள முடியும்.

எஸ். ஜே. வி. செல்வநாயகம், பண்டா செல்வா உடன்பாட்டுக்கு சென்ற காலத்திலிருந்து, வடக்கு கிழக்கின் காணி அதிகாரத்தை தமிழர்களின் கட்டு ப்பாட்டின் கீழ் கொண்டு வர வேண்டுமென்பதே முதன்மையான விடயமாக கொண்டிருந்தார். ஏனெனில் காணி அதிகாரம் இல்லாமல் வேறு எந்த அதிகாரம் இருந்தாலும் அதில் பயனில்லை. இவ் வாறானதொரு பின்புலத்தில் தான் 13ஆவது திருத் தச்சட்டத்தில் காணி மற்றும் பொலிஸ் அதிகார ங்கள் உறுதிப்படுத்தப்பட்டன.

தமிழர் தரப்பு முன்வைத்த அனைத்து பரிந்துரை களும் உள்வாங்கப்படாதிருந்தாலும் கூட, காணி, பொலிஸ் அதிகாரம் உறுதிப்படுத்தப்பட வேண்டு மென்னும் கோரிக்கை உள்வாங்கப்பட்டிருந்தது.

ஆனால் பின்னர், ஏற்பட்ட முரண்பாடுகளினால், இந்திய படைகள் வெளியேறியதை தொடர்ந்து, இந்தியா எட்ட நிற்கும் கொள்கையை கடைப் பிடிக்க முற்பட்டது. பின்னர், காணி, பொலிஸ் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கான முயற்சி களை தமிழர் தரப்பில் எவரும் முன்னெடுக்க வில்லை.

காரணம் விடுதலைப் புலிகள் தலைமையிலான ஆயுத போராட்டம் இடம் பெற்றுக் கொண்டிரு ந்தது. ஆனால் இன்று நிலைமைகளை திரும்பிப் பார்த்தால், எல்லாவற்றை விடவும் காணி அதிகாரத் தையே முதலில் உறுதிப்படுத்த வேண்டியிருக் கின்றது.

அரசியலமைப்பில் உள்ள காணி அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டாலன்றி, வடக்கு கிழக்கை மையப் படுத்தி இடம்பெறும் காணி தொடர்பான பிரச் சனைகளை தீர்க்கவே முடியாது.

அவ்வப்போது வீதிகளில் நிற்பதும், பின்னர் கலை ந்து செல்வதுமான அணுகுமுறைகளால் இந்தப் காணிப் பிரச்னையை நிரந்தரமாக தீர்க்க முடி யாது. இவை அனைத்துக்கும் முதலில், மாகாண சபை தேர்தல் இடம்பெற வேண்டும்.

காணி அதிகாரத்தை கையாளுவதற்கான விடயங் கள் முற்றிலுமாக அமுல்படுத்தப்பட வேண்டும். முதலில் காணி அதிகாரத்தை நடைமுறைப்படு த்துங்கள். பின்னர் பொலிஸ் அதிகாரம் தொடர்பில் பேசுவோமென்னும் நிலைப்பாட்டை தமிழர் தரப்பு ஒற்றுமையுடன் முன்வைக்க வேண்டும். அவ்வாறி லில்லாது, பேச்சின் போது, ஆளுக்கொரு நிலைப் பாட்டை முன்வைப்பதால், இந்த விடயங்களை கையாள முடியாது. முதலில் காணி அதிகாரம் பின்னர் மற்றையது என்னும் நிலைப்பாட் டைக் கைக்கொள்ளுவதன் ஊடாக காணிப் பிரச்னைக் கான நிரந்தர தீர்வை ஏற்படுத்துவதற்கான முயற்சி யில் தமிழ் கட்சிகள் ஒற்றுமையாக பயணிக்க வேண்டும்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் இடம் பெற்றது என்ன?

## சிறையில் இருந்து சுரேஸ் சாலேக்கு பிள்ளையான் தெரிவித்த செய்தி என்ன?

பொதுத் தேர்தலின் பின்னர் பிள்ளையான் என்னையும் தனது சகோதரரையும் சுரேஸ் சாலேயை சந்திக்குமாறு கேட்டுக் கொண்டார்– கோட்டாபய ராஜபக்சவும் தற்போதைய அரசாங்கமும் எவ்வாறு பதவிக்கு வந்தனர் என்பதை மறக்க வேண்டாம் தன்னை விடுதலை செய்யா விட்டால் அதற்காக கடும் விலையை செலுத்த வேண்டியிருக்கும் என தெரிவிக்குமாறு பிள்ளையான் எங்களை கேட்டுக் கொண்டார் என உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து சனல் 4 ஆவணப்படத்தில் முக்கிய தகவல்களை வெளியிட்ட ஹன்சீர் ஆசாத்மௌலானா தெரிவித்துள்ளார்.



சனல் 4 ஆவணப்படத்திற்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணி குறித்த தகவல்களை வழங்கிய ஹன்சீர் ஆசாத் மௌலானா மேலும் பல தகவல்களை அடங்கிய புதிய அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார் அதில் அவர் தெரிவித்துள்ளதாவது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம் பெற்ற அன்று மாலை ஊடகங்கள் மூலம் வெளியான தகவல்களை அடிப்படையாக வைத்தே நான் ஏற்பாடு செய்த சந்திப்பில் கலந்து கொண்டவர்களே உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்டனர் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் மூலமும் சிஐடி விசாரணை மூலமும் நான் சந்திக்க வேண்டும் என சுரேஸ் சாலே விரும்பிய நபர் (தாக்குதல் இடம்பெற்ற அன்று காலை) ஜமீல் என்பதை நான் அறிந்து கொண்டேன்– அவர் தாஜ்சமுத்திராவில் தாக்குதலை மேற்கொள்ள வேண்டும் என திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவர் அங்கிருந்து வெளியேறி தெகிவளையில் உள்ள சிறிய ஹோட்டலில் தன்னை வெடிக்க வைத்தார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவிற்கு பிள்ளையானும் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியினரும் ஆதரவளித்தனர். கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியானதும் சுரேஸ் சாலே இலங்கை திரும்பினார் மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டார்– தேசிய புலனாய்வு பிரிவின் இயக்குநராக நியமிக்கப்பட்டார் இன்றும் அந்த பதவியில் தொடர்கின்றார்.

பிள்ளையானிற்கு எதிராக வலுவான ஆதாரங்கள் உள்ளதால் முன்னாள் சட்டமா அதிபர் அவருக்கு எதிரான குற்றச் சாட்டுகளை வாபஸ் பெற மறுத்தார்– 2020 ஆகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி பொதுத்தேர்தல் இடம்பெற்ற வேளை பிள்ளையான் தொடர்ந்தும் சிறையிலேயே இருந்தார். பொதுத்தேர்தலின் பின்னர் பிள்ளையான் என்னையும் தனது சகோதரரையும் சுரேஸ் சாலேயை சந்திக்குமாறு கேட்டுக் கொண்டார். கோட்டாபய ராஜபக்சவும் தற்போதைய அரசாங்கமும் எவ்வாறு பதவிக்கு வந்தனர் என்பதை மறக்க வேண்டாம் இதன்னை விடுதலை செய்யா விட்டால் அதற்காக கடும் விலையை செலுத்த வேண்டியிருக்கும் என தெரிவிக்குமாறு பிள்ளையான் எங்களை கேட்டுக் கொண்டார்.

சில நாட்களின் பின்னர் சட்டமா அதிபர் மட்டக்களப்பு நீதிமன்றில் பிள்ளையானிற்கு எதிரான வழக்கை விலக்கிக் கொண்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் ஈடுபட்டவர்கள் குறித்து எனக்கு தெரிந்த தகவல்களிற்கு அப்பால் 2005 முதல் 2015 வரை இடம் பெற்ற பல அரசியல் படுகொலைகள் குறித்த பல விரிவான தகவல்கள் எனக்குதெரியும்.

டிரிபோலி பிளட்டுனே இந்த படுகொலைகளில் பலவற்றை செய்திருந்தது–இது இலங்கை இராணுவத்தின் புலனாய்வு பிரிவின் இயங்கிய இரகசிய கொலைக் குழு. முதலில் இந்த குழுவிற்கு மேஜர் பிரபாத் புலத்வட்ட தலைமைதாங்கினார் அதன் பின்னர் கேணல் சாமி குணரத்தின இதற்கு தலைமை தாங்கினார்.

அவ்வேளை இராணுவபுலனாய்வு பிரிவின் தலைவராக செயற்பட்ட மேஜர் ஜெனரல் கமால் கருணாசேனவின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இந்த பிரிவு செயற்பட்டது. பின்னர் இவர் இராணுவ பிரதானியாக பதவி உயர்த்தப்பட்டார் இந்த குழுவினர் கோட்டாபய ராஜபக்ச பாதுகாப்பு செயலாளராக பணியாற்றிய வேளை அவரிடமிருந்து நேரடி உத்தரவை பெற்று செயற்பட்டனர் .

யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் பல அரசியல் படுகொலைகளிற்கு இந்த குழுவினரே காரணம் – படுகொலைகள் பத்திரிகையாளர்கள் படுகொலைகளிற்கு இவர்களே காரணம்

குறிப்பாக இவர்களே முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப்பரராஜசிங்கம் நடராஜா ரவிராஜ் போன்றவர்களின் கொலைகளிற்கு காரணம் மேலும் லசந்த விக்கிரமதுங்க சிவராம் நடேசன் படுகொலைக்கும் டிரிபோலி பிளட்டுனே காரணம் .

கிழக்கு பல்கலைகழக துணைவேந்தர் பேராசிரியர் ரவீந்திரநாத் ஊடகவியலாளர் பிரகீத்எக்னலிகொட ஆகியோர் காணாமல் (6ம் பக்கம் பார்க்க)


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# ஜனாதிபதித் தேர்தல் பிற்போடப்படுமானால் பொதுத் தேர்தலுக்கும் அதே கதி தான்!

**கட்டுரையாளர்:
கனடாவில் இருந்து
– பனங்காட்டான் –**

2024ல் ஜனாதிபதி தேர்தலை நடத்தினால் நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய முடியாது போகுமென்ற ஐக்கிய தேசிய கட்சி அக்கிராசனர் வஜிர அபேவர்த்தனவின் அறிவிப்பை அபாய எச்சரிக்கையாகவே பார்க்க வேண்டியுள்ளது. நாடாளுமன்ற ஆட்சியும் நீட்சி பெறும் சாத்தியமுண்டு. உள்ராட்சித் தேர்தலுக்கு என்ன நடந்தது என்பது நல்லதொரு பாடம்.

இந்த மாத ஆரம்பத்தில் எழுதிய பத்தியில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன முதலாவது ஜனாதிபதியாக தேர்தல் மூலம் தெரிவாகவில்லையென்பதையும், அரசியலமைப்பில் திருத்தத்தை மேற் கொண்டு தம்மைத்தாமே ஜனாதிபதியாக்கிக் கொண்டாரென்பதையும் குறிப்பிட்டிருந்தேன்.

1977க்குப் பின்னர் 1983ல் இடம் பெற வேண்டிய பொதுத்தேர்தலை சர்வஜன வாக்கெடுப்பின் வழியாக 1989 வரை பின் தள்ளி, நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை பன்னிரண்டு ஆண்டுகளுக்கு நீட்டினார் என்பதையும் அப்பத்தியில் சுட்டியிருந்தேன்.


ஜே.ஆரின் அரசியல் வாரிசான ரணில் விக்கிரமசிங்க மேற் குறிப்பிட்டவைகளில் எவைகளை கடைப்பிடிக்கும் எண்ணவோட்டத்தில் இருக்கிறாரோ தெரியாது என்றும் அடிக்குறிப்பிட்டிருந்தேன். என்ன காலமோ என்ன நேரமோ ரணில் விக்கிரமசிங்க இதில் ஏதோ ஒன்றை அல்லது இரண்டையும் பின்பற்றப் போகிறாரோ என்ற அச்சம் இன்று தென்னிலங்கையில் தோன்றியுள்ளது.

ரணிலின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் அக்கிராசனர் வஜிர அபேவர்த்தன இது தொடர்பாக வெளியிட்ட ஒரு கருத்தும், இதற்குப் பதிலடியாக முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்த கருத்தும் இப்போது பெருமளவில் விமர்சிக்கப்படுகின்றன.

கடந்த பொதுத்தேர்தலில் முழுமையாகத் தோல்வியடைந்த ஐக்கிய தேசிய கட்சிக்கு தேசியப் பட்டியல் மூலம் கிடைத்த ஆசனத்தால் ரணில் நாடாளுமன்ற உறுப்பினரானார். கடந்த வருட அறகலய போராட்டத்தால் பதவி இழந்த கோதபாயவின் ஜனாதிபதி ஆசனத்துக்கு ரணில் நாடாளுமன்றத்தால் தெரிவானதையடுத்து, அவரது தேசியப்பட்டியல் இடத்துக்கு வஜிர அபேவர்த்தன நியமனமானார். 1982ம் ஆண்டிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களுள் ஒருவராக விளங்கும் இவர் ரணிலின் அதிமிகு நம்பிக்கைக்குரியவர்.

2024ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அடுத்த ஆண்டில்தான் ஜனாதிபதித் தேர்தலும் நடத்தப்பட வேண்டும். எனவே இதற்கான நிதியை நவம்பர் மாத





வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்க வேண்டும்.

2024ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்படுமானால், நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படும்' என்று வஜிர அபேவர்த்தன தெரிவித்த கருத்தே, ஜனாதிபதி தேர்தல் பற்றிய சந்தேகங்களையும் கேள்விகளையும் எழுப்பியுள்ளது. தேர்தல்களைக் கேட்பவர்கள் நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்து அதலபாதாளத்துக்கு தள்ள விரும்புகிறார்கள் என்றும் ஒரு குண்டை இவர் தூக்கி வீசியுள்ளார்.

நாடு முழுவதும் உள்ள 340 உள்ராட்சிச் சபைகளுக்கு தேர்தல்களை நடத்துவதற்கு வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு பிரசாரமும் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் தேர்தலை ரணில் அரசு பின்போட்டது. 8,325 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டியில் 87,000 பேர் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய போதிலும் நிதியின்மையை காரணம் காட்டி நாடாளுமன்றம் ஒத்தி வைத்தது. கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற வேண்டிய தேர்தல் இதுவரை இடம்பெறவில்லை. ஆறு மாதங்கள் முடிவடைந்த நிலையில் இத்தேர்தல்களை ரத்துச் செய்யும் முடிவு சில நாட்களுக்கு முன்னர் எட்டப்பட்டது.

தேர்தல் பின்போடப்பட்டதால் வேட்புமனுக்களை தாக்குதல் செய்தவர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கினர் என்பதால், தேர்தலை ரத்துச் செய்ய சம்பந்தப்பட்ட அமைச்சின் ஆலோசனைக் குழு ஏகமனதான இணக்கம் தெரிவித்துள்ளதாக பிரதமர் தினேஸ் குணவர்த்தனவின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

வஜிர குணவர்த்தன தெரிவித்துள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு நிதியின்மையையும், உள்ராட்சித் தேர்தலை நிதியின்மை காரணமாக ரத்துச் செய்ய அரசாங்கம் எடுத்துள்ள முடிவையும் ஒரே மேசையில் வைத்து அணுக வேண்டிய நேரம் வந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு நிதி இல்லையென்ற அறிவிப்பு ரணில் வெளிநாட்டில் நிற்கும் வேளையில் வந்துள்ளதாயினும், அவரது அனுமதியின்றி இதனை வஜிர அபேவர்த்தன தெரிவித்திருக்க மாட்டார் என்பது நிச்சயம். அதேசமயம் ஐக்கிய தேசிய கட்சியின் உயர்மட்ட முடிவாகவும் இது இருக்கலாம்.

இந்த அறிவிப்புத் தொடர்பாக ரணிலை தொடர்ந்து ஆதரித்து வரும் ராஜபக்சக்களின் பொதுஜன பெரமுன எந்தக் கருத்தையும் இதுவரை வெளியிடவில்லை. ஆனால், பெரமுனவிலிருந்து பிரிந்து தனிக்குழுவாக இயங்கும் முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தமது கருத்தை சுடச்சுட பகிரங்கமாக வெளியிட்டுள்ளார்.

நிதியின்மையை காரணமாக்கி ஜனாதிபதி தேர்தலை பின்போட ரணில் திட்டமிடுகின்றாரா என்ற கேள்வியுடன் தமது அறிவிப்பை வெளியிட்டுள்ள இவர்இ முன்னர் பல அரசாங்கங்களில் பல அமைச்சுப் பதவிகளை வகித்தவர். சுயமான அரசியல் கொள்கைகள் இல்லாதவர். பதவிகளுக்காக கட்சிகள் மாறியவர். தேசியப் பட்டியல் வாயிலாகவே நாடாளுமன்ற உறுப்பினராகி அமைச்சர் பதவிகளைப் பெற்றவர் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

2019 நவம்பர் மாதத்தில் இடம் பெற்ற தேர்தலில் ஜனாதிபதியாக தெரிவான கோதபாயவின் எஞ்சிய பதவிக் காலத்துக்கே ஜனாதிபதியாக பதவி வகிக்க நாடாளுமன்றத்தால் தெரிவான ரணில் தமது பதவிக்காலத்தை நீடிக்க அதிகாரமற்றவர் என்பது பீரிஸின் வாதம்.

எந்தக் காரணம் கூறியும் கோதபாயவுக்கு மக்கள் வழங்கிய ஐந்து ஆண்டுகள் ஆணையை ரணில் நீடிக்க முடியாது. தேர்தலை பின்போடவும் முடியாதென அடித்துக் கூறியுள்ளார் ஜி.எல்.பீரிஸ். சர்வதேச நாணய நிதியத் திடமிருந்து இரண்டாம் கட்டக் கடனாக 2.9 பில்லியன் அமெரிக்க டாலர்களை பெறுவதை எதிர்வரும் மார்ச் மாதத்தில் நிறைவேற்ற வேண்டிய வேளையில், ஜனாதிபதி தேர்தலை பின்போட எடுக்கப்படும் முயற்சிக்கு சர்வதேச நிதி நிறுவனங்கள் ஆதரவளிக்க மாட்டா எனவும் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் முடிவையே அதன் அக்கிராசனர் வஜிர அபேவர்த்தன வெளிப்படுத்தியுள்ளாரென தாம் கருதுவதாக தெரிவித்துள்ள பீரிஸ், ஜனாதிபதி தேர்தலை பின்தள்ளுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பான தங்கள் நிலைப்பாட்டை பொதுஜன பெரமுன தாமதமின்றி வெளிப்படுத்த வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

'நீ காற்று, நான் மரம் – என்ன சொன்னாலும் தலையாட்டுவேன்' என்ற நிலைமையில் ரணிலுடன் இறங்கிச் செல்லும் பெரமுன இதுபற்றிச் சொல்ல என்ன இருக்கிறது. இப்போதுள்ள அவர்களின் அரசியல் நிலைமை அவ்வாறுள்ளது.

பெரமுனவுக்குள் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை தீர்மானிக்க முடியாதுள்ளது. பசிலா நாமலா என்ற போட்டி ஒருபுறம். இருவரையும் கோதபாய விரும்பவில்லை என்பது இன்னொரு புறம். பெரமுனவிலிருந்து பிரிந்து தனித் தனிக் கூட்டாக இயங்கும் விமல் வீரவன்ச, உதய கம்பன்பில மற்றும் ஜி.எல். பீரிஸ், டலஸ் அழகப்பெரும ஆகியோர் நிலைப்பாடு மறுபுறம்.

பெரமுனவிலிருந்து ஒரு தொகையினரை தனித்துப் பிரித்தெடுக்க ரணில் விரித்திருக்கும் வலை, சஜித் பிரேமதாச அணியிலிருந்த பலரை இழுத்து வரும் முயற்சிக்கான இன்னொரு வலையென தெற்கின் தலைமைக் கட்சிகள் இழுபறிநிலையில் நிற்கின்றன.

அமைச்சர் பதவி கேட்டு போராடி வரும் பெரமுனவைச் சேர்ந்த ஊழல்வாதிகளான மஹிந்தானந்த அளுத்கம, ரோகித அபேகுணவர்த்தன ஆகியோரை தமது வெளிநாட்டுப் பயணத்தில் கூட்டிச் சென்றிருக்கும் ரணிலின் யுக்தி தனிரகம்.

எல்லாவற்றையும் எண் கணிதத்தில் போட்டுப் பார்த்தால் ஜனாதிபதி தேர்தலை பின்போடக்கூடிய சாத்தியமே அதிகமாகக் காணப்படுகிறது. அப்படியென்றால் பொதுத்தேர்தலும் அதே வழிதான். ஜே.ஆரின் ஆட்சி மீள வருகிறதா?

# மல்கம் ரஞ்சித் கர்தினாலுக்கு எதிராக தமிழ் ஆயர்கள் போர்க்கொடி!

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் அரசியல் செல்வாக்கு இல்லாமல் வெளிப்படையான விசாரணை நடத்தப்படுமானால், அது தொடர்பில் சர்வதேச விசாரணை தேவையில்லை என கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் தெரிவித்துள்ளமை சர்ச்சைகளை தோற்றுவித்துள்ளது.

அரசு நேர்மையான அதிகாரிகள் மூலம் தலைமைத்துவத்தை எடுத்துக் கொண்டு, அரசியல் அழுத்தங்களுக்கு உட்பட்டு ஒருவரையொருவர் பாதுகாத்துக் கொள்ளாவிட்டால், சர்வதேசத்திற்கு செல்ல வேண்டிய அவசியமில்லை.

அவை அனைத்தும் வெளிப்படையான முறைகளில் செய்யப்பட வேண்டும் என்றும் பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் தெரிவித்துள்ளமையே சர்ச்சைகளை தோற்றுவித்துள்ளது.

இனப்படுகொலைக்கான சர்வதேச நீதியை கோரிவரும் தமிழ் தரப்புக்கள் தெற்கில் நடைபெற்ற ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை கோரப்பட்டபோது ஆதரவை தெரிவித்திருந்தன.

அத்துடன் 2009இன் இறுதி யுத்தத்தில் முன்னெடுக்கப்பட்ட இனஅழிப்பு தொடர்பில் நீதி கோரிய தமது கோரிக்கையினை வலுப்படுத்துவதாக ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலான சர்வதேச விசாரணையினை சுட்டிக்காட்டி வந்திருந்தனர். இந்நிலையில் சர்வதேச விசாரணை தேவையில்லை என கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் தெரிவித்துள்ளமை தமிழ் ஆயர்கள் மற்றும் தமிழ் தரப்புக்களிடையே சர்ச்சைகளை தோற்றுவித்துள்ளது.



# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

23 செப்டம்பர் 2023 முதல் 29 செப்டம்பர் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 100வது பிறந்த நாள் நினைவாக



### திரு முத்துத்தம்பி பேராயிரவர்

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் உயர்திரு முத்துத்தம்பி பேராயிரவர் அவர்களது 100வது பிறந்த நாள் 24 செப்டம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது 100வது பிறந்த நாள் நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு முத்துத்தம்பி பேராயிரவர் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கிறாசியா அமிர்தநாதன்

யாழ்ப்பாணம் சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கிறாசியா அமிர்தநாதன் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாள் 23 செப்டம்பர் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கிறாசியா அமிர்தநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி செல்லத்துரை பூவின்பராணி

திருகோணமலையைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை பூவின்பராணி அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 23 செப்டம் பர் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி செல்லத்துரை பூவின்பராணி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணை ந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 45ம்நாள் நினைவஞ்சலி



### திரு ஆனந் ரகுபதி

கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த. திரு ஆனந் ரகுபதி அவர்களது 45வது நாள் நினைவு நாள் 24 செப்டம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது பெற்றோர்கள், சகோதரங்கள், உறவுகள் இணைந்து அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை ஆகிய மூன்று இல்லங்களுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு ஆனந் ரகுபதி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கிருபாமலர் ஜனார்த்தனகுமார்

இளவாலை கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருபாமலர் ஜனார்த்தனகுமார் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவாகவும் மஹாலய உபயமாகவும் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 30 செப்டம்பர் 2023 சனிக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி கிருபாமலர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது,23வது ஆண்டு நினைவஞ்சலி

### திரு செல்லர் மார்க்கண்டு



### திருமதி மனோன்மணி மார்க்கண்டு

யாழ்ப்பாணம் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களான திரு செல்லர் மார்க்கண்டு அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளையும் திருமதி மனோன்மணி மார்க்கண்டு அவர்களது 23வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 27 செப் 2023 புதன்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு செல்லர் மார்க்கண்டு, திருமதி மனோன்மணி மார்க்கண்டு இணையர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடுபத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



23 செப்டம்பர் 2023 சனிக்கிழமை சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கிறாசியா அமிர்தநாதன் அவர்களது 6வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



23 செப்டம்பர் 2023 சனிக்கிழமை திருகோணமலையைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை பூவின்பராணி அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



24 செப்டம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் திரு முத்துத்தம்பி பேராயிரவர் அவர்களது 100வது பிறந்த நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது பிறந்த நாள் நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



24 செப்டம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ஆனந் ரகுபதி அவர்களது 45வது நாள் நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது பெற்றோர்கள், சகோதரங்கள் உறவுகள் இணைந்து அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



24 செப்டம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ஆனந் ரகுபதி அவர்களது 45வது நாள் நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது பெற்றோர்கள், சகோதரங்கள் உறவுகள் இணைந்து அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



24 செப்டம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ஆனந் ரகுபதி அவர்களது 45வது நாள் நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது பெற்றோர்கள், சகோதரங்கள் உறவுகள் இணைந்து அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



24 செப்டம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி முருகநாதன் நவமணி தம்பதிகளின் செல்வப்புதல்வி மதுரா முருகநாதனின் பிறந்த நன்னாளாகும். அன்றையதினம் செல்வி மதுரா முருகநாதன் அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



25 செப்டம்பர் 2023 திங்கட்கிழமை கோண்டாவில் மேற்கைச் சேர்ந்தவர்களான திரு திருமதி நாகமுத்து நடராஜா குடும்பத்தினர் நினைவாக அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



27 செப்டம்பர் 2023 புதன்கிழமை யாழ்.சித்தன்கேணியைச் சேர்ந்தவர்களான திரு செல்லர் மார்க்கண்டு அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளும் திருமதி மனோன்மணி மார்க்கண்டு அவர்களது 23வது ஆண்டு நினைவு நாளுமாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
AJITH SABARATNAM President
Cell: 647.401.5800
email: ajithsaba@gmail.com
125 Topflight Dr, 2nd floor
Mississauga ON. L5S 1Y1
Tel: 416.439.2800

Cash Point
PAWN BROKERS
$1000 $20/month
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5% முதல் 2% வட்டி மட்டுமே (per month)
416-757-0034 • 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

நியூ ரங்கனாஸ் தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர், டுபாய் தங்க நகைகளை கோடைகால சிறப்புத் தள்ளுபடி விலையில் கொள்வனவு செய்ய அரிய சந்தர்ப்பம்.
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles, Yellow Building, 6055 Unit C-102 Scarborough, ON M1X 0A7 - Canada. 647 702 2159

நந்தா NANTHA CATERS
Sri Lankan & Indian Food
BEST CATERS IN TOWN
Catering, Bakery & Take Out
Brimley & Steeles - 4915 Steeles Ave.E | Warden & Finch - 3268 Finch Ave.E
Kippling & Steeles - 5010 Steeles Ave. E
Call 416 NANTHA 1 - 416 626 8421

N.K.S DRAPERY & BLINDS FABRIC
• Custom Made Vertical Blinds • Venetian Blinds • Draperies • Curtain • Shutters • Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:Info@nksdrapery.com Web:www.nksdrapery.com

உங்கள் அனைத்து விதமான சட்ட ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்!
SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION
T: 416-949-0404
F: 416-948-0303
Vivekananthan Sasitharan - Rajabalini Sasitharan
Barristers, Solicitors & Notaries Public
10 Milner Business Court, Suite # 709, Scarborough Ontario, M1B 3C6

RE/MAX
Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com




முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்

உங்கள் அபிமான **ஈழநாடு** பத்திரிகை

12வது ஆண்டாக நடாத்தும்

# ஊட்டும் கரங்கள்

வெள்ளி விழா கண்ட
அரவிந்தனின்
**மெகா ரியூனேர்ஸ்**
இசையில்

Mega Tuners



பிரபல பின்னணிப் பாடகர்
## முகேஷ்

பிரபல பின்னணிப் பாடகி
## சுர்முகி



**OCTOBER 29 2023**
**SUN @ 6:00PM**

**ARMENIAN COMMUNITY CENTRE**
**50 HALLCROWN PLACE**
**TORONTO**
**(VICTORIAL PARK & CONSUMER ROAD)**

கனேடிய தமிழ்ப்பாடகர்கள்
இணைந்து வழங்கும்

# இன்னிசை மாலை

**அன்பளிப்பு**
**$200.00 • $100.00 • $50.00**
விழா குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகும்

தொடர்புகளுக்கு: ஈழநாடு பரமேஸ் - 416.841.9600
தயவு செய்து நுழைவுச்சீட்டுடன் மண்டபத்திற்கு வரவும்.
நிகழ்வுகள் சரியாக மாலை 6:00 மணிக்கு ஆரம்பமாகும்.
தங்கள் ஆதரவுக்கு நன்றிகள்

**சிறப்பு உணவு:** றொறன்ரோவின் முன்னணி உணவகமான **நந்தா கேற்றறிங்** வழங்கும் சிறப்பு உணவு அனைத்து பார்வையாளர்களுக்கும் வழங்கப்படும்


UTHAYAS SUPER MARKET
5010 Steeles Ave W, Etobicoke, ON M9V 5C6
416-740-7971

Century 21
JEESETHA JEGANATHAN
BUYING & SELLING MADE EASY WITH THE JJ TEAM!
JAY JEGANATHAN
JEYSURESH JEGANATHAN

GODAVARI
Truly South Indian
416-431-5577
416-901-5578
795 Markham Rd, Scarborough, ON M1H 2Y2
godavarica.com
godavaritoronto@gmail.com

FUNERAL ARRANGEMENTS
OF YOUR LOVED ONES
Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
Funeral Director
S. Christeen
416-258-6759

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.
லோகன் இராசையா
416 991 1292
Can West Transport

TECHSOURCE
Computer, Electronics & Cellphones Liquidator
1260 Kennedy Rd, Scarborough, ON
416.757.9111
994 Albion Rd Etobicoke, ON
647.352.2229

KANAGAAMBIKAI GOLD HOUSE
We Sell
*Singapore Jewellery
*Finest Quality 22K Gold
*Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
*Jewellery Repairs
Pawning Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3, SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197

HV HAYHER & VASAN
LITIGATION LAWYERS
CAOUTHAM VASAN
208-885 PROGRESS AVE SCARBOROUGH, ON
207-32 VILLAGE CENTRE PLACE MISSISSAUGA, ON
• Personal Injury • Real Estate • Wills and Estates • Immigration
vasan@hvlaw.ca
905-461-1515

வசந்தம் சுப்பர்மார்க்கெட்
2900 Markham Road, Scarborough, ON M1X 0C8
416 292 8585

U Star Art
All In One Place
Get an Exclusive Offer With an Exciting Package!
Our Services
• Bridal Makeup • Bridesmaid • Saree Blouse • Cake Decorating
PRIYA UTHAYAN
(416) 897-5816
647-945-7212

SR Reliance Auto Collision Inc.
Complete Auto Body Repairs & Painting
Rasan
Proprietor
Tel: 416-822-4272
Fax: 647-352-4272
Email: atsrasan@gmail.com
15 Granger Ave. Toronto, ON. M1K 3K9

TIMES IRON WORKS INC.
Times Metals

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.
சாந்தா பஞ்சலிங்கம்
416 200 5470
(முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர்)

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
Main Branch Scarborough 309-80 Corporate Dr Scarborough, ON M1H3G5
Mississauga Branch 45-2355 Derry Road Mississauga, ON L5S1V6
Tel: 416.439.0224
Fax: 416.439.0226

Century 21
Innovative Realty Inc.
Jude GNANENDRAN
Sales Representative
416-827-2347 Direct
jude.gnanendran@century21.ca
www.century21jude.com
2250 Markham Road, Unit 3, Toronto ON M1B 2W4
Office: 416-298-8383 Fax: 416-298-8303

MORTGAGE LOAN
J.R.B UNIVERSAL INC.
ALMOST ALL SERVICES AVAILABLE
Best Rate Mortgage in Town, Bad Credit New Immigrants bankruptcy, 0% Down Payment. 1st, 2nd & 3rd Mortgage upto 100%
Loans, Mortgages, Insurances, RESP Real Estate, Credit Counseling Accounting and Tax Services
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

Chapel Ridge
Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

STANDARD MORTGAGES INC.
Tel: (416) 298-1700
Fax: (416) 754-8651
Cell: (416) 993-2638
Toll Free: 1-866 765 9427
Toll Free Fax: 1-866 765 9375
raj@smi4loan.com
www.standardmortgagesinc.com
RAJ SUBRAYAM
Director

காப்புறுதி ஒன்றே!
• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance
• Mortgage Insurance • Super Visa Insurance • RESP, RRSP and TFSA
Arun KULASINGAM 416.357.2847
Life Insurance Agent
Foresters

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சங்கம் கனடாவின்
கலை மரபுரிமை உபகுழு பெருமையுடன் வழங்கும்

# கலையரசி 2023



ஞாயிற்றுக்கிழமை, ஒக்ரோபர் 8, 2023
மாலை 5:31
Flato Markham Theatre
171 Town Centre Blvd,
Markham, ON L3R 8G5



- தமிழ் மரபிசை
- விழித்திடு – நாடக அளிக்கை
- கலையரசி மலர் வெளியீடு
- ஷிபோதனின் "எங்கேயும் எப்போதும் சங்கீதம் சந்தோஷம்"
- நடன நிகழ்வுகள்
- சிறப்புச் சொற்பொழிவு

என்று மூன்று தமிழும் ஒரிடம் சேரும் மாபெரும் கலையிரவு

**எங்கள் கலை எனுஞ் சுடர் கொண்டே**
**எவ்விருட்டாயினும் நாம் கடப்போம்**

## தொடர்புகள்:

சேயோன் - 416 602 4530 | குகதாசன் - 416 558 5939
ரவீந்திரா - 416 230 0360 | மதியழகன் - 416 277 1067

எமது பண்பாடுகளையும் விழுமியங்களையும் காப்போம்

# முன்னணி குழவிக் கூட்டுக்குக் கல் எறிகின்றதா?



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



திருகோணமலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வாகன ஊர்தி தாக்கப்பட்டிருக்கிறது. திலீபனின் படத்தை ஏந்திய அந்த ஊர்தி கடந்த ஆண்டும் அந்த வழியால் சென்றிருக்கிறது. இது இரண்டாவது தடவை. அது தாக்கப்பட்ட இடம் கல்லோயா குடியேற்றத் திட்டத்தின் கீழ் அபகரிக்கப்பட்ட தமிழ் நிலம். கடந்த ஆண்டு அந்த ஊர்தி குறி வைக்கப்படவில்லை. இந்த முறை தான் அது குறி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஊர்தியை குறி வைத்து அசம்பாவிதங்கள் நடக்கலாம் என்பது ஏற்கனவே மட்டக்களப்பில் உணர்த்தப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு தாக்குதலை முன்னணி எதிர்பார்க்கவில்லை என்பது காணொளிகளைப் பார்க்கும் பொழுது தெரிகிறது. தம்மைத் தற்காத்துக் கொள்ளத் தேவையான ஆளணிகளோடு அவர்கள் வரவில்லை என்பதும் தெரிகிறது.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் எனப்படுகிறவர் தனியன் அல்ல. அவர் ஒரு சமூகம். அவருக்கு வாக்களித்த மக்களின் பிரதிநிதி. ஆனால் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மிகச் சிலரோடு நிற்கிறார். அதுவும் தாக்கியவர்களுக்குத் துணிச்சலைக் கொடுத்திருக்கும். போலீசார் தாக்குதலைத் தடுக்க வேண்டும் என்ற வேகத்தோடு செயல்படவில்லை. தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மத்தியில் ஊடகவியலாளர்களும் இருந்திருக்கிறார்கள். அந்த ஊடகவியலாளர்களில் சிலர் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினரைப் பாதுகாக்க முற்பட்டிருக்கிறார்கள். தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மத்தியில் பெண்கள் காணப்படுகிறார்கள். அதை ஒரு சமூகத்தின் தாக்குதலாகக் காட்ட வேண்டும் என்று நன்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

முன்னணி கடந்த சில மாதங்களாக தமிழ் அரசியலை நொதிக்கச் செய்கின்றது. தமிழ் எதிர்ப்பு அரசியலின் ஈட்டி முனையாக அக்கட்சி மேலெழுந்து வருகிறது. குறிப்பாக நிலப்பறிப்பு, விகாரைகளைக் கட்டுவது போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக அக்கட்சி தீவிரமாக எதிர்ப்பை காட்டி வருகிறது. எனவே அக்கட்சிக்கு அதன் வரையறைகளை உணர்த்தும் விதத்தில் அச்சுறுத்தலைக் கொடுப்பதே அத்தாக்குதலின் நோக்கமாக இருக்கலாம். ஏற்கனவே கஜேந்திரகுமாரைக் கைது செய்து பின் வெளியில் விட்டமையும் அவருடைய கொழும்பு வீட்டை முற்றுகையிட முற்பட்டமையும் அந்த நோக்கத்தோடு தான். கொழும்பு வீட்டை முற்றுகையிட முற்பட்டமை. கஜேந்திரக்குமாரை விடவும் அவருடைய தாயாருக்கு அச்சுறுத்தலானது. ஏற்கனவே கணவனைப் பறிகொடுத்தவர். அவரைப் பொறுத்தவரை அதுதான் அவருடைய வசிப்பிடம். அங்கே அவருக்கு நெருக்கடியைக் கொடுப்பதன் மூலம் அவருடைய மகனுக்கு நெருக்கடியைக் கொடுக்கலாம். எனவே திருகோணமலையில் நடந்த தாக்குதலானது 2009க்குப் பின் தமிழ் எதிர்ப்பு அரசியலுக்கு இருக்கக் கூடிய வரையறைகளை உணர்த்தும் நோக்கிலானது என்று சொல்லலாம்.

ஒரு புறம் அது முன்னணியை அச்சுறுத்தும் நோக்கிலானது. இன்னொரு புறம் அதன்மூலம் முன்னணியை ஓரளவுக்கு பலப்படுத்தும் உள்நோக்கமும் இருக்கலாம். தமிழ்த் தேசியப் பரப்பில் வெளிப்படையாக இந்திய எதிர்ப்பை முன்னெடுக்கும் கட்சி அது. அக்கட்சியை குறிப்பிடத்தக்க அளவுக்கு பலப்படுத்தினால், தமிழ்மக்கள் மத்தியிலேயே இந்திய எதிர்ப்பை நிறுவனமயப்படுத்தலாம். அதன்மூலம் அரசாங்கத்தின் வேலை இலகுவாகி விடும் என்ற உள்நோக்கமும் அத்தாக்குதலுக்கு இருக்கக்கூடும்.

அந்த ஊர்தி அந்த வழியால் போனதால் சிங்கள மக்கள் ஆத்திரமூட்டப்பட்டார்கள் என்று ஒரு வாதம் முன் வைக்கப்படுகிறது. பொதுவாக எல்லா எதிர்ப்பு அரசியற் களங்களிலும் இந்த வாதம் முன் வைக்கப்படுவதுண்டு. ஆயுதப் போராட்டத்தின் தொடக்க காலங்களில் கொரில்லாத் தாக்குதல்கள் நடந்த போதும் இந்த வாதம் முன்வைக்கப்பட்டது. குளவிக் கூட்டுக்குக் கல்லெறிகிறார்கள். அதனால் குளவிகள் கலைந்து அப்பகுதியில் இருக்கும் சாதாரண மக்களைக் கொட்டும் என்றும் விளக்கம் தரப்பட்டது.

எதிர்ப்பு அரசியலின் பண்பே அத்தகையது தான். எதிர்ப்பு கூர்மையடையும் பொழுது அதற்கு எதிரான ஒடுக்குமுறையும் கூர்மை அடையும்.ஒடுக்கும் தரப்பு அதன் மூலம் தன்னை அம்பலப்படுத்தும். அதனால் ஒடுக்கப்படும் தரப்பு மேலும் அரசியல் மயப்படுத்தப்படும். ஒடுக்குமுறைக்கு எதிராக அணி திரளும். உலகமெங்கிலும் எதிர்ப்பு அரசியல் அப்படித்தான் வளர்ந்திருக்கிறது.

திருமலைச் சம்பவம் முன்னணியின் வாக்கு வங்கியைப் பலப்படுத்தும். அதே சமயம் அது திருகோணமலையில் இளம் தலைமுறையினர் மத்தியில் விழிப்பை ஏற்படுத்தக் கூடியது. கடந்த 14 ஆண்டுகளாக ஒரு தலைமுறை அரசியல் நீக்கம் செய்யப்பட்டு வருகிறது. அதில் ஒரு பகுதி ஏன் சிங்கள பௌத்தத்தை எதிர்க்க வேண்டும் என்று கேட்கத் தொடங்கி விட்டது. இன்னொரு பகுதி ஏன் பொது எதிரி என்று அழைக்க வேண்டும் என்றும் கேட்கத் தொடங்கி விட்டது. இப்படிப்பட்டதோர் அரசியல் சூழலில் திருமலைச் சம்பவமானது ஒடுக்கு முறைக்கு எதிரான விழிப்பை அதிகப்படுத்தக் கூடியது. சம்பவத்தின் பின் அங்குள்ள இளையோரின் சமூகவலைத்தளச் செயற்பாடுகளில் அதைக் காணக் கூடியதாக இருப்பதாக ஒரு சமூகச் செயற்பாட்டாளர் சொன்னார்.

சம்பவத்துக்கு முன் திலீபன் யார் என்று கேட்டால் தெரியாது என்று சொல்லக் கூடிய பலரும் இப்பொழுது திலீபனைத் தேடி வாசிக்கிறார்கள் என்றுமவர் சொன்னார். அது மட்டுமல்ல. சம்பவத்தின் பின் தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள பெரும்பாலான கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் முன்னணியுடன் தமது சகோதரத்துவத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

குறிப்பாக முன்னணியில் இருந்து பிரிந்து சென்ற மணிவண்ணன் உட்பட தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் முன்னணிக்கு ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்டிராத அரசியல்வாதிகளும் சம்பவத்தைக் கண்டித்திருக்கிறார்கள். நாட்டுக்கு வெளியே தமிழகத்தைச் சேர்ந்தவர்களும் உட்பட பலரும் கண்டித்திருக்கிறார்கள்.

ஒடுக்குமுறை என்று வரும் பொழுது தமிழ்மக்கள் இனமாகத் திரள்வார்கள் என்பதனை இச்சம்பவத்தின் பின்னரான நிலமைகள் காட்டுகின்றன. இங்கேதான் முன்னணி கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு விடயமும் இருக்கின்றது.

காலத்துக்கு காலம் தமிழ் மக்கள் ஏதோ ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் ஆகக் கூடிய பட்சம் பெருந்திரளாகத் திரண்டிருக்கிறார்கள். தமிழ்க் கட்சிகளால் அவர்களை அவ்வாறு திரட்ட முடியவில்லை என்பது தான் கடந்த 14 ஆண்டு காலத் துயரம். அவ்வாறு தமிழ்க் கட்சிகளையும் செயற்பாட்டாளர்களையும் ஒப்பீட்டளவில் ஒன்றாகத் திரட்டிய ஆகப் பிந்திய சம்பவமாக திருமலைத் தாக்குதலை கூறலாம்.

திருமலையில் முன்னணி தாக்கப்பட்ட இடம் எதுவென்று பார்த்தால் அது திட்டமிட்ட குடியேற்றங்களின் மூலம் சிங்கள மயப்படுத்தப்பட்ட ஒரு பகுதி தான். கடந்த பல தசாப்தகால தமிழ் அரசியலால் அப்பகுதியை மீட்க முடியவில்லை. அதுமட்டுமல்ல, இப்பொழுது அங்கே வைத்து ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் தாக்கப்பட்டிருக்கிறார். கிழக்கில் தொடங்கிய நிலப்பறிப்பு திருகோணமலையில், அம்பாறையில் குறிப்பிடத்தக்க அளவிற்கு வெற்றி பெற்றுவிட்டது. அது வடக்குக்கும் படர்ந்து வருகிறது. அதை எதிர்த்த காரணத்தால் முன்னணி தாக்கப்படுகிறது.

தாக்கப்பட்ட போது திருமலை யாழ் பெருஞ்சாலையில் முன்னணி ஒற்றைக் கட்சியாகத் தான் நின்றது. அதன் நாடாளுமன்ற உறுப்பினர் மிகச் சில ஆதரவாளர்களோடு காணப்பட்டார். அந்த ஊர்தி சில வாகனங்களோடு தான் நகர்ந்து சென்றது. அது ஒரு மக்கள் மயப்பட்ட வாகனப் பேரணி அல்ல. தமிழ்த் தேசிய எதிர்ப்பு அரசியலின் ஈட்டி முனையாகக் காணப்படும் ஒரு கட்சி மிகச் சிலரோடு ஒரு தாக்குதலை எதிர் கொண்டமை என்பது எதைக் காட்டுகின்றது? அது தமிழ்த் தேசிய எதிர்ப்பு அரசியலின் பலவீனமா? அல்லது அந்தக் கட்சியின் பலவீனமா?

இதே திலீபனின் நாளில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 2020ல் எல்லாக் கட்சிகளும் இணைந்து எதிர்ப்பைக் காட்டின. அப்பொழுது போலீசார் நீதிமன்றத் தடை உத்தரவின் மூலம் அந்த எதிர்ப்பு நடவடிக்கையை முறியடிக்க முயற்சித்தார்கள். ஆனால் அங்கே ஒன்றுபட்டு நின்றதால் போலீசார் அந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இதை இங்கு எழுதுவதன் மூலம் இக்கட்டுரையானது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏனைய கட்சிகளோடு இணைந்து ஐக்கிய முன்னணியை உருவாக்க வேண்டும் என்றெல்லாம் சிறுவர் சித்திரக் கதை எழுத வரவில்லை. ஆனால், பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் தமிழ் மக்கள் மத்தியில் புலப்பெயர்வு அதிகரித்து வரும் ஓர் அரசியல் சூழலில், தமிழ்த் தேசிய எதிர்ப்பு அரசியல் எனப்படுவது இவ்வாறு மக்கள் மயப்படாத சிறு திரள் நடவடிக்கையாகச் சுருங்கி விட்டதை, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு நெடுஞ்சாலையில் வைத்துத் தாக்கப்படுவதை, அவரைச் சூழ்ந்து மிகச் சில ஆதரவாளர்களே நிற்பதை, சிங்கள பௌத்த அரசியலும் வெளியுலகமும் எப்படிப் பார்க்கும்?

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின்

(18ம் பக்கத் தொடர்ச்சி) கற்பனையான எல்லைக்கோடு என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இந்தோ-பசுபிக் என்றால் என்னவென்று யாருக்கும் தெரியாது. சிலர், அது இந்தியாவின் மேற்கு எல்லையில் முடிவடைகிறது என்கிறார்கள், மற்றவர்கள் அது ஆபிரிக்கா வரை இருப்பதாக கூறுகிறார்கள். சிலர் மேற்கு பசுபிக் உடன் முடிவடைவதாக சொல்கிறார்கள், இன்னும் சிலர் தெற்கு பசுபிக் பகுதிக்குச் செல்கிறார்கள்.' என்று அதனை எள்ளி நகையாடும் வகையில் கருத்து வெளியிட்டிருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க.

அவரது இந்தக் கருத்து அமெரிக்காவில் இருந்தே வெளியிடப்பட்டுள்ள நிலையில், அதனை வொஷிங்டன் எவ்வாறு எடுத்துக் கொள்ளும் என்பது போகப் போகத் தான் தெரியவரும்.

எது எவ்வாறாயினும், ரணில் விக்கிரமசிங்கவின் இந்தச் சீண்டல் கருத்துக்கள், இலங்கையை நம்ப முடியாத நண்பர்களின் பட்டியலிலேயே அமெரிக்கா வைத்திருக்கும் நிலையை ஏற்படுத்தும்.

ராஜபக்ஷவினராக இருந்தாலும், ரணில் விக்கிரமசிங்கவாக இருந்தாலும் நிலைமை ஒன்று தான் என்ற கணிப்பையும் அமெரிக்காவிடம் ஏற்படுத்தியிருக்கும். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளுவதற்கு முற்படும் நாடு ஒன்றின் தலைவரின் அதிகப் பிரசங்கித்தனமான கருத்தாகவே இது எடுத்துக் கொள்ளப்படும்.

## இனவெறியன் சரத் வீரசேகரவுக்கு விசா வழங்க அமெரிக்கா இழுத்தடிப்பு?

(4ம் பக்கத் தொடர்ச்சி) அமெரிக்காவின் பங்கு குறித்த தனது விமர்சனங்களால் அமெரிக்கா அதிருப்தியடைந்திருக்க லாம் என அவர் தெரிவித்துள்ளார்.தனக்கு விசா வழங்கத் தவறியுள்ளமை குறித்து தெளிவான விளக்கம் வேண்டும் எனவும் சரத்வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.




ஈழத் தமிழர்களின் அரசியல் இன்று பிரதானமாக மூன்று வகைப்பட்டதாக உள்ளது. ஒன்று, தமிழ்த் தேசிய அரசியல் என்ற பிரகடனத்தின் கீழ் அரச எதிர்ப்பு மற்றும் தமிழின விடுதலையை மையப் படுத்திப் பேசுவதாகும். இதற்குத்தான் தமிழ்ப் பெருந்திரளினர் ஆதரவளிக்கின்றனர். இதனால் இந்தத் தரப்பே பாராளுமன்றத்திலும் மாகாண சபை, உள்ளுராட்சி மன்றங்கள் போன்றவற்றிலும் முன்னிலையில் உள்ளது.

1980 — 2009 வரையில் இது ஆயுதப் போராட்ட அரசியலாக செயற்பாட்டு அரசியலாக இருந்தது. 2009க்குப் பின்னர், செயற்பாட்டுப் பாரம்பரியம் இல்லாதொழிந்து, பேச்சு அரசியலாக அறிக்கை அரசியலாகச் சுருங்கி விட்டது.

அதனால் தான் இதை தமிழின விடுதலையை மையப்படுத்திப் பேசுவது என்று குறிப்பிடுகிறோம். இந்தப் பண்பினால் தான் இந்தத் தரப்புக்குக் கடுமையான விமர்சனங்களும் உண்டு.

செயற்பாட்டுப் பாரம்பரியமொன்றிற்கூடாகப் பயணித்து வந்த மக்களுக்கு, அது இல்லாமற் போனது ஏமாற்றத்தை அளிக்கிறது. ஆனாலும் அவர்கள் மனங்கசந்த நிலையிலும் இந்தப் பேச்சு அரசியலுக்கே ஆதரவளித்து வருகிறார்கள். அதற்கான காரணத்தை இந்தக் கட்டுரையின் போக்கில் நீங்கள் அறிய முடியும்.

மக்களுடைய கசப்பு, அதனால் எழுகின்ற விமர்சனங்கள் எல்லாம் இருந்தாலும் இந்த அரசியற் தரப்பினர் இவை குறித்துத் தம்மை மறு பார்வைக்குட்படுத்தவோ புதுப்பித்துக் கொள்ளவோ முயற்சிப்பதில்லை.

இதனால் எழுந்த புற அழுத்தங்களாலும் உள்ளக முரண்பாடுகளாலும் இந்தத் தரப்புப் பல அணிகளாகக் கடந்த பத்து ஆண்டுகளில் உடைந்து, துண்டு துண்டுகளாகியுள்ளன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உடைந்து, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம், ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம், தமிழ்த் தேசியக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயகப் போராளிகள்.. என இந்தப் பட்டியல் நீள்கிறது.

ஆயுதப் போராட்ட செயற்பாட்டுப் பாரம்பரியத்திற்கூடாக வந்தவர்களும் அதற்கு மறுதலையாகப் பேச்சுப் பாராம்பரியத்திற்குள் சிக்கி விட்டனர் என்ற கசப்பான அனுபவத்தையும் நாம் ஜீரணிக்க வேண்டியுள்ளது.

இதற்குள் ஏராளம் கவனிக்க வேண்டிய புள்ளிகளும் கோடுகளும் உள்ளன. இந்தத் தமிழ்த் தமிழ்த்தேசிய அரசியலில் அரச எதிர்ப்பைக் காட்டும் அளவுக்கு இந்திய விசுவாசம் காண்பிக்கப்படுகிறது. அதாவது தமக்கு இந்தியாவுடன் நெருக்கம் உண்டெனக் காட்டப்படுகிறது. அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) போன்ற ஒரு சில கட்சிகளைத் தவிர்த்து ஏனையவை அனைத்தும் இந்திய விசுவாசத்தின் கீழ் உறைந்து போயுள்ளன. இவையே இலங்கை இந்திய உடன்படிக்கையைக் குறித்தும் ஆர்வமாகப் பேசிக் கொண்டிருப்பன. இலங்கை இந்திய உடன்படிக்கையின் விளைவான 13ஆவது திருத்தத்தைப் பற்றி வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் ஈடுபாட்டுடன் இவை இருப்பதையும் காணலாம்.

இன்னொரு நிலையில் இவை அனைத்தும் இந்தியா கை விட்டால் எப்படியும் சர்வதேச சமூகத்தின் (மேற்குலகின்) ஆதரவும் நீதியும் நியாயமும் கிடைத்து விடும் என்று ஆழமாக நம்பிக் கொண்டிருப்பன. இதையே மக்களுக்கு அவை விடுதலைக்கான ஒரே வழியாகவும் காட்டிக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவும் சர்வதேச சமூகமும் தமிழ் மக்களின் விடுதலையிலும் சரி, அவர்களுடைய அரசியலிலும் சரி ஒருபோதுமே நெருங்கி நின்றதும் இல்லை. தீர்வை முழுமையாகப் பெற்றுக் கொள்ள உதவப் போதுமில்லை. அதற்கான களச் சூழலும் சர்வதேச நிலைமையும் இப்போது வரைக்கும் இல்லை. இதுதான் உண்மை.

இல்லையென்றால் இந்தக்குட்டி இலங்கையில் இந்த இனப்பிரச்சினை இப்படித் தீர்க்கப்படாமல் இழுபட்டுக் கொண்டிருக்காது. ஆனால் இவை பிரச்சினை முற்றிப் போகாமல் இருக்கும் அளவுக்கு ஒரு இடைத் தலையீட்டையும் மறைமுக அழுத்தத்தையும் கொடுக்கின்றன. இவற்றின் பாத்திரமும் இதுவரையான வகிபாகமும் அப்படித்தானுள்ளது.

இதையெல்லாம் இந்தச் சக்திகளுக்குத் தெரியாது என்றில்லை. இருந்தாலும் இதை விட்டால் இப்படிக் கதை விடுவதை விட்டால் இவற்றுக்கு வேறு கதியும் இல்லை. வேறு வழியும் இல்லை. என்பதால் இந்திய — சர்வதேச வித்தையைக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

அதேவேளை இந்தத் தமிழ்த் தேசியவாதச் சக்திகள் சமூக அசமத்துவத்தைப் பற்றியோ சமூக விடுதலையைப் பற்றியோ பேசுவதேயில்லை. மட்டுமல்ல தமிழ் மக்களின் பொருளாதாரம், அவர்களுடைய வாழ்க்கை நிலவரம் பற்றி ஒன்றுமே கதைப்பதில்லை. இது இவற்றின் பெருங் குறைபாடாகும்.

இதனால் பெருந்தொகுதி மக்கள் தொடர்ந்தும் சாதி, மதம், பிரதேசவாதம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளனர். அத்துடன் மக்களுடைய பொருளாதார நிலையும் மோசமாகச் சரிவடைந்து சென்று கொண்டேயுள்ளது. இதற்கான மாற்றீடுகளும் எதிர்ப்பொறி முறைகளும் இதுவரை காணப்படவில்லை. இது மக்களுக்கு விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை இவை இதுவரையிலும் ஒரே புள்ளியில் தீர்வு பற்றியோ மக்களுக்கான அரசியற் பணிகள் பற்றியோ சிந்திப்பதற்கு இணையவில்லை. இதனால் தமிழ் மக்களுக்கான தீர்வு யோசனையை “13, 13 க்கு அப்பால், சமஸ்டி, இரு நாடு ஒரு தேசம்” என ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக, ஒவ்வொரு கோணத்தில் முன்வைத்துள்ளன.

இது மக்களுக்குக் குழப்பத்தை உண்டாக்குவதுடன், எதிர்த்தரப்பான அரசுக்கும் ஏனைய சக்திகளுக்கும் வசதியாக உள்ளது. இப்படிப் பல நிலைப்பாடுகளை முன்வைத்தால் நாம் எத்தகைய தீர்வை வழங்குவது என்று சாட்டுச் சொல்வது அரசுக்கு வாய்ப்பாகும். ஏற்கனவே தீர்வைத் தர விரும்பாத அரசுக்கு இது நல்வாய்ப்பை வழங்கி விடுகிறது. இந்தியாவுக்கும் இது பொருந்தும்.

இரண்டாவது, அரசாங்கத்தின் மீது உள்ளார்ந்த விமர்சனங்கள், எதிர்ப்புணர்வு இருக்கும்போதும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அதனுடன் இணைந்து (கரைந்து) செயற்படும் தரப்பாகும். இவையும் ஒரு கால கட்டத்தில் அரசை எதிர்த்துப் போராடியவை தான். ஏன் ஆயுதப் போராட்ட அரசியலின் வழியாக வந்தவையும்தான். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் போன்றவை இதற்கு உதாரணம். எப்படியோ இன்று இவை அரசுடன் இணைந்து ஜனநாயக நீரோட்டத்துக்குள் கரையத் தொடங்கி விட்டன. தமது வழியை இவை இணக்க அரசியல் என்று குறிப்பிடுகின்றன.

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்று இவை சொன்னாலும் பிரதேச சபையில் கூட சுயத்தன்மையைப் பேண முடியாத நிலையில் மத்தியினால் கட்டுப் பட்டிருப்பவை. இவை தமது வழிமுறையை அல்லது சாதனையை அபிவிருத்தி என்று சொல்லிக் கொண்டாலும் சரி, அபிவிருத்தி அரசியலை மேற்கொண்டாலும் சரி, இவற்றினால் எந்த எல்லைகளையும் தனித்துவமாகத் தொட முடியவில்லை.

ஆனால், அரச எதிர்ப்புத் தரப்பை விடவும் ஒப்பீட்டளவில் மக்களுக்கான தேவைகள், மக்கள் நலன்சார் நடவடிக்கைகள் என்ற வகையில் சில முன்னேற்றகரமான பங்களிப்புகளைச் செய்திருப்பவை என்பதை நாம் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். அதைத் தவிர அரசியல் ரீதியாக இவற்றினால் மக்களுக்கும் சரி, தமக்கும் சரி எந்த முழு வெற்றியையும் பெற முடியாதிருப்பவை.

இவை சர்வதேச சமூகத்தைப் பற்றிப் பெரிதாகப் பேசிக் கொள்வதுமில்லை. அதைப்பற்றி அக்கறைப் படுவதுமில்லை. ஆனால் இந்தியாவை தமது நெருங்கிய சகாவாகப் பார்க்கின்றன. அல்லது இந்தியாவை விமர்சிப்பதைத் தவிர்க்கின்றன. அத்துடன் இலங்கை இந்திய உடன்படிக்கையையும் 13ஆவது திருத்தத்தையும் அதற்கும் மேலான தீர்வையும் யாசிப்பவை.

ஆனாலும் இவற்றினாலும் ஒரு போதும் தாம் குறிப்பிடும் எல்லைகளைக் கூட தொட முடியாது. வேண்டுமானால் இருக்கும் காலம் வரையிலும் ஒன்றிரண்டு அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியுமே தவிர, மக்களுக்கான அரசியல் உரிமைகளைப் பெறவும் முடியாது. தனித்துவமாக இயங்கவும் முடியாது. அடுத்த தரப்பு இந்திய எதிர்ப்புடன் கூடிய தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுப்பது. இதற்கு உதாரணம், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி என்ற திரையில் மறைந்திருக்கும் இலங்கைத் தமிழ்க்காங்கிரஸாகும்.

இது சற்றுத் தீவிரமானது. இவற்றுக்கும் சமூக அரசியல் பொருளாதாரப் பார்வை இல்லை. முற்றிலும் உணர்ச்சிரமான அதி தீவிர அரசியலை முன்னெடுப்பவை. இவற்றுக்குப் பெரிய அளவில் மக்கள் ஆதவில்லை என்றாலும் குறிப்பிட்டளவு இளைய தலைமுறையினரிடத்தில் இந்தத் தரப்புச் செல்வாக்குப் பெற்றுள்ளது.

அடுத்த தரப்பு மூன்றாவது. இது தமிழ் அரசியலில் புதிய முகமாக, அரசுடன் இணைந்து கொள்ளாமல் (சரணடைந்து விடாமல் அல்லது கரைந்து போகாமல்) அதற்கு வெளியே நின்று ஆதரிக்க வேண்டிய புள்ளிகளில் ஆதரித்தும் எதிர்க்க வேண்டிய விடயங்களில் எதிர்த்தும் தமது அரசியலை முன்னெடுக்க முயற்சிக்கும் தரப்பாகும். இதற்கு மக்கள் ஆதரவு ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது.

ஆனால் இந்தத் தரப்பு அறிவுபூர்வமாக ஒவ்வொன்றையும் அணுக முற்படுவது. ஜனநாயகத்தைத் தன்னுடைய அடிச் சட்டகமாகக் கொண்டது. இனவாதத்தை முற்றாகவே நிராகரிப்பது. அதேவேளை பால் சமத்துவம், பிரதேச சமத்துவம்,

**கட்டுரையாளர்:-**
**கிளிநொச்சியில் இருந்து**
**- கருணாகரன் -**



இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்த அரசியல் தளத்தையும் அரசியல் உறவையும் கட்டமைக்க விளைவது. இந்தத் தரப்பு எழுச்சியடைய வேண்டும்.

இதற்கு உடனடியாக மக்கள் ஆதரவு ஒப்பீட்டளவில் குறைவாகவே இருக்கிறது. ஆனால் இந்தத் தரப்பு எதையும் அறிவுபூர்வமாக அணுக முற்படுவதாக இருக்கும். அதுதான் இதன் பலமாகும். அத்துடன் மக்களுடன் மிக நெருக்கமான உறவைக் கட்டியெழுப்பி, மக்களைப் புதிதாகச் சிந்திக்கச் செய்ய வேண்டும். அவர்களிடம் வரலாற்றுண்மைகளை எடுத்துரைத்தும், உலக அரசியலை விளக்கியும், தர்க்கித்தும், யதார்த்த நிலைகளை உணர வைத்தும் இந்த உறவைப் பலப்படுத்த வேண்டும். மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் உரிய முக்கியத்துவத்தை அளித்து, அவற்றுக்குப் பொருத்தமான தீர்வை விரைந்து காண வேண்டும். பிராந்திய, சர்வதேச அரசியலுறவைக் கட்டியெழுப்பவும் கையாளவும் வேண்டும். இதெல்லாம் கடினமானது, சவாலானது தான். ஆனாலும் இதைச் செய்தே ஆக வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால் இதுவரையான அரசியலில் இருந்து விலகி, வேறுபட்டு, ஒரு மாற்று அரசியலை முன்னெடுக்க விளையும் தரப்பாக இது இருக்க வேண்டும். அதாவது போருக்குப் பிந்திய அரசியலை (Post – War Politics) தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, தமிழ் பேசும் சமூகங்களுக்கும் ஏன், முழு இலங்கைக்கும் தேவையான புதிய எதிர்காலத்துக்கான அரசியலை, மக்கள் அரசியலை, அறிவுபூர்வமான அரசியலை முன்னெடுக்க விரும்புவதாக இது இருக்கும்.

இது இனவாத அரசியலுக்கு இனவெறுப்புக்கும் இனவொறுப்புக்கும் முற்றிலும் எதிரானது. அதற்காக முன்னர் இடது சாரிகள் பேசிய முன்னெடுத்த வைதீக அரசியலாக இல்லாமல், விடுதலைக்கான அரசியலாக இருக்கும்.

இப்படியான அரசியலை முன்னெடுக்கும் போது தான் புதிய அரசியலின் முகத்தையும் அதன் அக புறப் பண்பாட்டையும் உலக அரங்கில் முன்வைக்க முடியும். மட்டுமல்ல, மக்களுக்கும் புதிய ஒன்றை வழங்க முடியும். அந்தப் புதியது மக்களுக்குப் பயனுள்ளதாகவே இருக்கும்.

ஆனால் இத்தகைய அரசியலை முன்னெடுப்பதற்கு உள்நாட்டிலும் பிராந்தியத்திலும் சர்வதேச மட்டத்திலும் ஏகப்பட்ட சவால்களும் நெருக்கடிகளும் இருக்கும். அவற்றை மதிநுட்பத்தினாலும் அர்ப்பணிப்பான செயற்பாட்டினாலும்தான் வென்றெடுக்க வேண்டும்.

அரசியல் என்பது அறிவியல்துறை. அரசியல் என்பது (22ம் பக்கம் பார்க்க)

# சனல்4 ஐ.எஸ்.எஸ் தாக்குதலை மடை மாற்றுகின்றதா?

சனல் 4 தொலைகாட்சியின் கானொளி இலங்கை அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. அந்தக் கானொளியின் இலக்கு என்ன, என்பதற்கான பதில் அந்தக் காணொளியிலேயே இருக்கின்றது.


பிள்ளையானின் பேச்சாளராக இருந்தவரான ஆசாத் மௌலானா என்பவரால் கூறப்படும் விடயங்கள் தான், குறித்த காணொளியின் பிரதான விடயமாகும். அவரது கூற்றின்படி இந்தக் தாக்குதலானது, ராஜபக்ச குடும்பத்தை மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு சதி நடவடிக்கையாகும்.

இதில் பிள்ளையானும் தொடர்புபட்டிருக்கின்றார். பிள்ளையானுடன் இருந்த ஒருவர் என்னும் வகையில் பிள்ளையானுடன் தொடர்புடுத்தியே, மௌலானா விடயங்களை கூறுகின்றார். அப்படிக் கூறும் போதுதான் தனது பேச்சு எடுபடுமென்றும் அவர் கருதியிருக்கலாம்.

காணொளியின் இலக்கு மிகவும் தெளிவானது. அதாவது, ராஜபக்சக்களை குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவது. இந்த ஒரு நோக்கத்தின் அடிப்படையில் தான் குறித்த கானொளி வெளியிடப்பட்டிருக்கின்றது. ராஜபக்சக்களின் செல்வாக்கு ஏற்கனவே சரிவு நிலையில் தான் இருக்கின்றது. பின்னர் எதற்காக ராஜபக்சக்கள் இலக்கு வைக்கப்பட வேண்டும்? கோட்டபாய ராஜபக்சவோ அல்லது ராஜபக்ச குடும்பத்தை சேர்ந்தவர்கள் எவருமே அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பும் இல்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கும் போது, இந்தக் காணொளிக்கு பின்னால் இரண்டு நோக்கங்கள் இருக்கலாம்.

ஒன்று ராஜபக்சக்கள் மற்றும் ராஜபக்சக்களின் நிழலிலிருந்த கடும்போக்குவாதிகள் எழுச்சியடைவதற்கான வாய்ப்புக்களை தடுப்பது. அண்மைக் காலமாக அவ்வாறானதொரு தோற்றம் தென்பட்டது.

இரண்டு, இவ்வாறான தடைகளையும் மீறி, ஒரு வேளை, ராஜபக்சக்கள் எழுச்சியடைந்தாலும் கூட அவர்களை இறுக்குவதற்கான ஒரு துருப்புச் சீட்டாக ஈஸ்டர் தாக்குதலை பயன்படுத்துவது.



ஏனெனில், இதில் இலங்கையர்கள் மட்டும் கொல்லப்படவில்லை. ஐரோப்பியர்களும் கொல்லப்பட்டிருக்கின்றனர். ஐந்து அமெரிக்கர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். எனவே குறித்த காணொளிக்கு உடனடி இலக்குமுண்டு அதே வேளை, நீண்டகால இலக்கும் உண்டு. ஐரோப்பியர்கள் கொல்லப்பட்டிருக்கும் நிலையில், அது தொடர்பில் தலையீடு செய்வதற்கான நியாயபூர்வமான உரிமை ஐரோப்பிய ஊடகம் ஒற்றிற்குண்டு. அந்த வகையில் சனல் 4 இதில் தலையீடு செய்திருப்பதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்று எண்ணுவதும் நியாயமானது தான்.

ஆனால் ஒரு சாதாரண நபரது வாக்கு மூலத்தை மட்டும் முன் வைத்து இவ்வாறானதொரு காணொளியை வெளியிட்டிருப்பதுதான் சிக்கலானது. தவிர, இந்தக் காணொளி தாக்குதலின் சூத்திரதாரிகளை கண்டு கொள்ளவில்லை. இது ஒரு இஸ்லாமிய பயங்கரவாதத் தாக்குதல். இந்தக் தாக்குதல் இடம் பெற்று, இரு தினங்களின் பின்னர் எல்லை தாண்டிய இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஜ.எஸ்.எஸ்.ஜ, இந்த தாக்குதலுக்கு உரிமை கோரியிருந்தது. அதன் உத்தியோகபூர்வ செய்தி அமைப்பான அமாக், (Amaq News Agency) இதனை உறுதிப்படுத்தியதுடன், தாக்குதலில் ஈடுபட்ட தற்கொலை குண்டுதாரிகளை, அமைப்பின் போராளிகளென்றும் அறிவித்திருந்தது.




அதே வேளை, ஜ.எஸ்.ஜ.எஸ் அமைப்பின் வாராந்த வெளியீடான அல் நபா, இலங்கையில் மேற் கொள்ளப்பட்ட தாக்குதலின் மூலம் சிலுவை யுத்தக்காரர்களுக்கான ஜ.எஸ்.ஜ.எஸ் அமைப்பின் அச்சுறுத்தல் நிறைவேற்றப்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருந்தது.

இந்தக் தாக்குதல் இடம் பெற்றதைத் தொடர்ந்தே, ஜ.எஸ்.ஜ.எஸ் அமைப்பின் தலைவர் அபூ பக்கர் அல் பாக்தாதி சில வருடங்களுக்கு பின்னர் தனது இருப்பை வெளிப்படுத்தியிருந்தார். சுமார் ஐந்து வருடங்களுக்கு பின்னர் பாக்தாதியின் முகம் ஊடகங்களில் காண்பிக்கப்பட்டது. ஜ.எஸ்.ஜ.எஸ், அமெரிக்காவினால் பலவீனப்படுத்தப்பட்டு விட்டது, அதன் சர்வதேச வலையமைப்புகள் முற்றிலுமாக, வீழ்சியுற்று விட்டது என்னும் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் தான் இலங்கையில் இந்தக் தாக்குதல் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்தே அல் பாக்தாதி உற்சாகமாக தனது இருப்பை வெளிப்படுத்துகின்றார். அமெரிக்காவின் முன்னணி ஆய்வு நிறுவனமான ராண்ட் அப்போது, பாக்தாதி வெளியிட்ட காணொளியின் பொருள் என்ன என்னும் தலைப்பில் கட்டுரையொன்றை வெளியிட்டிருந்தது. அந்தக் கட்டுரையில் இந்த விடயங்கள் விவாதிக்கப்பட்டிருந்தன.

இலங்கையில், இவ்வாறானதொரு தாக்குதல் இடம் பெறுவதற்கான சாத்தியங்கள் தொடர்பில் ஏற்கனவே இந்திய உளவுத்துறை, இலங்கை புலனாய்வு பிரிவை எச்சரித்திருந்தது. ஆனால் அதன் பின்னரும் இந்தக் தாக்குதல் இடம் பெற்றிருந்தது. அப்போது இலங்கையின் முப்படைகளின் தலைவராக இருந்தவர் மைத்திரிபால சிறிசேன. அவ்வாறாயின் இது தொடர்பான முதல் குற்றவாளிவாக மைத்திரிபால சிறிசேனவைத் தான் குறிப்பிட வேண்டும். இந்த அடிப்படையில் ஏற்கனவே மைத்திரியால நீதிமன்றத்தினால் குற்றவாளியாகவும் இனம் காணப்பட்டிருக்கின்றார்.

இந்தக் தாக்குதலில் ஐந்து அமெரிக்கர்கள் கொல்லப்பட்டதன் பின்னணியில், இந்த விடயம் தொடர்பில் அமெரிக்க உள்ளக உளவுத்துறையான எப்.பி.ஜ விசாரணைகளை முன்னெடுத்திருந்தது. இரண்டு வருட விசாரணைகளின் விளைவாக 2020 டிசம்பர் மாதம் 11ம் திகதி, லொஸ்ஏஞ்சல் மாவட்ட நீதிமன்றத்தில் இது தொடர்பில் வழக்கொன்றையும் தாக்கல் செய்திருந்தது. இந்தக் தாக்குதலின் மூளையாக செயற்பட்டவர் மற்றும் தாக்குதலுக்கான உதவிகளை செய்தவர்கள் என்னுமடிப்படையில் மூன்று முஸ்லிம் நபர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

நிலைமை இவ்வாறிருக்கின்ற போது, மூன்று வருடங்களின் பின்னர், ஆசாத் மௌலான என்னும் ஒரு நபரின் வாக்கு மூலத்தை முன் வைத்து, ஈஸ்டர்தின தற்கொலைக் தாக்குதலானது, உள்ளூர் அரசியலுக்காக மேற்கொள்ளப்பட்டதாக சனல் 4 ஒரு புதிய கதையை கூற முற்படுகின்றது. விடயங்களில் இலங்கை புலனாய்வுத் துறை கவனக் குறைவாக இருந்திருக்கின்றது என்னும் குற்றச் சாட்டை முன் வைக்கலாம். ஆனால் எல்லை தாண்டிய இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஜ.எஸ்.எஸ்.ஜ அமைப்பின், தொடர்பை முற்றிலும் நிராகரிக்கும் வகையில், இவ்வாறானதொரு காணொளியை வெளியிட்டிருப்பது, சணல் 4 இதற்கு முன்னர் வெளியிட்ட காணொளிகள் தொடர்பான நம்பகத் தன்மையையும் கேள்விக்குள்ளாக்கின்றது.

கோட்டபாய ராஜபச்சவை அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்காக பிள்ளையானின் உதவியுடன், தற்கொலை குண்டுதாரிகள் பயிற்றுவிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது தர்க்கரீதியில் நம்பக் கூடிய கதையாக இல்லை. ஆசாத் மௌலானா என்னும் நபர் தனது சொந்த தேவைகளுக்காக அல்லது வேறு எவருடைய தேவைகளுக்காகவோ, சில விடயங்களை வலிந்து புனைவதான தோற்றமே தெரிகின்றது.

கோட்டபாய ராஜபக்ச முஸ்லிம்கள் தொடர்பில் ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டவரல்லர். இது முஸ்லிம்களுக்கும் தெரிந்த விடயம். இந்த நிலையில் கோட்டபாயவின் தேவைக்காக, பிள்ளையானின் ஆதரவுடன், முஸ்லிம் இளைஞர் யுவதிகள் வெடித்து சிதறியிருக்கின்றார்கள் என்பது விடயத்தின் கனதியை மலினப்படுத்துவதாகவே இருக்கின்றது. பிள்ளையானால் முஸ்லிம்களை தற்கொலை குண்டுதாரிகளாக்க முடியுமா?

கோட்டபாய மற்றும் பிள்ளையான் தொடர்பில் அரசியல் ரீதீயில் பலவாறான அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஜனநாயக தளத்தில் அதனை வெளிப்படுத்துவதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. அது வேறு விடயம். கோட்டபாய ராஜபக்ச தமிழ் மக்களை பொறுத்தவரையில் முற்றிலும் எதிர்மாறானதொரு சிங்கள அரசியல்வாதி. தன்னையொரு சிங்கள பௌத்த தலைவன் என்று பிரகடணம் செய்த ஒருவர். இப்படியான பல்வேறு சிக்கல்கள் கோட்டபாயவின் பக்கத்திலுண்டு. அடிப்படையில், கோட்டபாய போன்ற ஒருவர் ஆட்சிக்கு தகுதியான ஒருவருமல்ல.

**கட்டுரையாளர்:-**
**தாயகத்தில் இருந்து**
**- யசீந்திரா –**



கோட்டபாய தொடர்பில் இந்த அடிப்படையில் ஒருவர் விவாதித்தால் அதில் முரண்பட ஒன்றுமில்லை. ஆனால் ஒரு எல்லை தாண்டிய பயங்கரவாதத் தாக்குதலை வெறும் உள்ளூர் விவகாரமாக சுருக்குவது ஆபத்தானது. இது மீண்டும், இஸ்லாமிய அடிப்படைவாத சிந்தனைகள் எழுச்சி கொள்வதற்கான களத்தை இலகுபடுத்தவே பயன்படும்.

ஈஸ்டர் தாக்குதல் இடம் பெறுவதற்கு முன்னரே, கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமிய அடிப்படைவாத கருத்தியல் வேர் கொண்டு வருவது தொடர்பில், பல்வேறு தகவல்கள், ஆங்காங்கே வெளியாகியிருந்தன.

அதே வேளை, ஜ.எஸ்.ஜ.எஸ் கருத்தியலால் ஈர்க்கப்படும் போக்கும் துளிர் விடுவதான அவதானத்தையும் சிலர் வெளியிட்டிருக்கின்றனர். இலங்கையைச் சேர்ந்த முஸ்லிம்கள், சிரியாவிற்கு சென்று ஜ.எஸ்.ஜ.எஸ் அமைப்புடன் இணைந்து செயற்படுவது தொடர்பான தகவல்களும் வெளியாகியிருந்தன. இவ்வாறானவர்கள் இந்தியாவின் கேரள மானிலத்திலுள்ள ஜ.எஸ்.ஜ.எஸ் வலமைப்பின் மூலமாகவே, சிரியாவிற்கு சென்றிருப்பதாகவும் ஏற்கனவே இந்திய புலனாய்வு தகவல்கள் உண்டு.

ஆசாத் மௌலான என்னும் நபரும் இந்தியாவிற்கு சென்று, அங்கிருந்தே ஜரோப்பாவில் தஞ்சமடைந்திருக்கின்றார். இவர் எவ்வாறான தொடர்புகளின் வழியாக சென்றார், இவர் எதற்காக இவ்வாறான தகவல்களை வெளியிட்டார். ஆசாத் மௌலானாவின் தகவல்களின் அடிப்படையில் இந்த விடயத்தை வேறு விதமாக விசாரிக்க வேண்டிய அவசியமுண்டு. அதாவது, எல்லை தாண்டிய இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஜ.எஸ்.ஜ.எஸ் அமைப்பின் உறுப்பினர்கள், தங்களின் இலக்கிற்காக, உள்ளூர் அரசியல்வாதிகளை பயன்படுத்தியிருக்கின்றனரா? இந்தக் கோணத்தில் விசாரணை செய்வதற்கான தேவையுண்டு. குறித்த மௌலானா தான் இதற்கான பிரதான சாட்சியாகும். ஏனெனில் அவர் வெளிப்படுத்தியிருக்கும் தகவல்களின் அடிப்படையில் ஜ.எஸ்.ஜ.எஸ் பயங்கரவாத அமைப்பின் இலங்கைக்கான தொடர்பாளராக அவர் செயற்பட்டிருக்கின்றார் என்னும் முடிவுக்கே வர வேண்டியிருக்கின்றது. ஜரோப்பிய புலனாய்வுத் துறைகள், விடயத்தை, இந்தப் பின்புலத்தில் விசாரிக்க முற்பட்டால் தான், இதன் உண்மைத் தன்மை வெளியில் வரும்

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் அதிகப் பிரசங்கித்தனம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கப் பயணத்தின் போது, நியுயோர்க்கில் உள்ள சர்வதேச அமைதிக்கான கார்னகி என்டோவ்மன்ட் நிகழ்வில் தெரிவித்த கருத்துக்கள் பலத்த விவாதங்களைத் தோற்றுவித்திருக்கிறது.

இந்த நிகழ்வில் அவர் ஆக்கஸ் (AUKUS) கூட்டணியைப் பற்றி செய்திருக்கின்ற விமர்சனங்களும், இந்தோ- பசுபிக் தொடர்பான தெரிவித்திருக்கின்ற கருத்துக்களும், நிச்சயமாக மேற்குலகினால் ரசிக்கத்தக்கவையாக இருந்திருக்காது.

அமெரிக்காவில் இருந்து கொண்டே, அமெரிக்கா தலைமையிலான இராணுவக் கூட்டை அவர் விமர்சனம் செய்திருக்கிறார். அமெரிக்காவின் நீண்டகால பாதுகாப்பு மூலோபாயமாகிய இந்தோ- பசுபிக் கோட்பாட்டையும் அவர் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறார்.

இந்த இரண்டு விடயங்களையும் சுட்டிக் காட்டும் போது, ஜனாதிபதி ரணில் தீவிரமாக எடுத்துக் கொள்ளாமல் இருந்தாரா அல்லது, சபையில் ஆரவாரத்தை எதிர்பார்த்து செய்தாரா என்ற சந்தேகம் இன்னமும் பலருக்கு இருக்கிறது.

2021 செப்டெம்பரில் தான் ஆக்கஸ் கூட்டணி உருவாக்கப்பட்டது. அது அமெரிக்கா, அவுஸ்ரேலியா, பிரித்தானியா ஆகிய மூன்று நாடுகளும் இணைந்து உருவாக்கிய அமைப்பு.

பிரித்தானியா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் கூறிக் கொள்கின்றன. அவ்வாறான நிலையில் ரணில் விக்கிரமசிங்க அதனை தவறான இராணுவக் கூட்டு என்று வர்ணித்திருக்கிறார். இந்தியப் பெருங்கடலிலும் பசுபிக் பிராந்தியத்திலும்

அந்தக் கடனை மறுசீரமைப்புச் செய்வதற்கு, சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைப்படி செயற்படுவதற்கு சீனா மறுத்து வருகிறது. ஒரு வருடத்துக்கு மாத்திரமே சீனா கடனை மீளப் பெறுவதை இடைநிறுத்த இணங்கியது.



சீனா தனது வல்லமையை பெருக்குவது மாத்திரம் பிரச்சினையல்ல. அது ஏனைய நாடுகளின் பாதுகாப்புக்கும், இறையாண்மைக்கும் அச்சுறுத்தலாக மாறுகின்ற போது, அதனை உலக நாடுகள் கண்டு கொள்ளாமல் இருக்காது.

அடுத்த ஆண்டில் இருந்து கடனுக்கான வட்டி மற்றும் கடனை திருப்பிச் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறான நிலையில், சீனாவை பகைத்

எப்போதும் பச்சைக் கொடி காண்பித்துக் கொண்டிருக்கிறது. தென் சீனக் கடல் பிராந்தியத்தில் சீனாவின் அத்துமீறல்களையும் இலங்கை கண்டு கொள்வதில்லை.

இவையெல்லாம் சீனாவுடன் முரண்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு விடக் கூடாது என்பதற்காக ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் கையாளுகின்ற தந்திரங்கள்.

இத்தகைய நிலையில் தான் இப்போது ரணில் இன்னும் சற்று முன்னே போய் சீனாவை காப்பாற்ற முற்பட்டிருக்கிறார். அவர் வலிந்து சென்று ஆக்கஸ் கூட்ட

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



ணியை விமர்சித்து, சீனாவின் செயற்பாடுகளை நியாயப்படுத்த முற்பட்டிருக்கிறார். அது மாத்திரமன்றி, அவர் அமெரிக்காவின் இந்தோ- பசுபிக் கொள்கையையும் நகைப்புக்கிடமாக சித்திரித்திருக்கிறார்.

அமெரிக்கா தனது எதிர்காலப் பாதுகாப்புக்கென தூரநோக்குத் திட்டங்களை வகுத்துக் கொள்ளும் நாடு.

அடுத்த 500 ஆண்டுகளுக்கான பாதுகாப்புக் கொள்கையை அமெரிக்கா வகுத்திருப்பதாக சொல்லப்படுவதுண்டு.

அமெரிக்கா முன்னர் பசுபிக் கட்டளைப் பீடம் என்ற பெயரிலேயே தனது பாதுகாப்புக் கட்டமைப்பை வைத்திருந்தது.

2018இல் தான், அதற்கு இந்தோ- பசுபிக் கட்டளைப் பீடம் என்று மறு பெயரிட்டது. அதனைத் தொடர்ந்து தான் அமெரிக்காவின் இந்தோ- பசுபிக் மூலோபாயக் கொள்கை வெளியிடப்பட்டது.

இந்தக் கூட்டு உருவாக்கப்பட்ட போது அதனை மேற்குலக நாடுகள் பலவும் எதிர்பார்க்கவில்லை. அதற்கு முக்கியமான காரணம், பிரான்ஸூடன் செய்து கொண்டிருந்த- 56 பில்லியன் யூரோ அணுசக்தி நீர்மூழ்கி கப்பல்களை தயாரிக்கும் ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டே, அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவுடன் அவுஸ்ரேலியா இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டிருந்தது.

இந்தோ பசுபிக் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக, அவுஸ்ரேலியா அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களைப் பெற்றுக் கொள்வதற்கு, அமெரிக்காவும் பிரித்தானியாவும் உதவும் வகையில் தான் இந்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது.

மேம்படுத்தப்பட்ட இணைய பொறிமுறை, செயற்கை நுண்ணறிவு மற்றும் தன்னாட்சி, குவாண்டம் தொழில்நுட்பங்கள் கடலுக்கடியிலான திறன்கள், ஹைப்பர் சோனிக் மற்றும் எதிர் - ஹைப்பர்சோனிக், மின்னணு போர்முறை, கண்டுபிடிப்பு மற்றும் தகவல் பகிர்வு போன்ற விடயங்களிலும் ஒத்துழைப்பை உறுதிப்படுத்தும் வகையில் தான் இந்த ஆக்கஸ் கூட்டணி உருவாக்கப்பட்டது.

இந்த ஆக்கஸ் கூட்டணியை ஒரு இராணுவக் கூட்டு என்றும், இது தேவையற்றது, இதனால் எதிர்விளைவுகள் ஏற்படலாம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார்.

இந்தக் கூட்டு உருவாக்கப்பட்டது ஒரு மூலோபாயத் தவறு என்றும், இந்தக் கூட்டணி ஒரே ஒரு நாட்டை இலக்கு வைத்தது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், குறி வைக்கப்பட்டுள்ள நாடு எது என்பதை வெளிப்படையாக ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடாவிட்டாலும், அது சீனா தான் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று.

தென் சீனக்கடலில் சீனாவின் சண்டித்தனம், சொலமன் தீவுகளில் தளம் அமைப்பதற்கான அதன் முஸ்தீபுகள், இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில் தனது கடல்சார் பாதுகாப்பு பலத்தை தொடர்ந்து பெருக்கிக் கொண்டிருப்பது போன்ற காரணங்கள் தான் இந்த முத்தரப்பு கூட்டுக்கான அடிப்படைக் காரணம் ஆகும்.

ஆயினும் இதனை ஒரு தொழில் நுட்ப பகிர்வுக்கான கூட்டாகவே அமெரிக்கா,

அதை விட அமெரிக்காவும் பிரித்தானியாவும், கோலோச்சிய இந்தப் பிராந்தியத்தில் சீனா மிகப் பெரிய சக்தியாக வளருவதையோ, அவுஸ்ரேலியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதையோ அந்த நாடுகள் விரும்பாது.

இந்த நிலைமை சீனாவுக்கு மாத்திரமல்ல. எல்லா நாடுகளுக்கும் பொருந்தும். இவ்வாறானதொரு பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆக்கஸ் கூட்டணி தொடர்பாக கருத்தை வெளியிட்டிருப்பது, பக்கசார்பற்ற கருத்தாக கொள்ளப்படாது.

இந்தக் கூட்டினால், இலங்கைக்குப் பாதிப்பு ஏற்படுவதற்கும் வாய்ப்புகள் குறைவு. ஆனாலும் ஆக்கஸ் கூட்டணி குறித்து ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள கருத்து சீனாவின் பக்கம் அவர் சாய முற்படுகிறாரா என்ற சந்தேகத்தையே எழுப்பியிருக்கிறது.

இதே நிகழ்வில் இன்னொரு சந்தர்ப்பத்தில் ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவுக்கோ, சீனாவுக்கோ சார்பானவர் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். தாம் இலங்கையின் சார்பானவர் என்பதை அவர் அழுத்தமாக குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தக் கருத்து மாத்திரம் அவரது நம்பிக்கையை காப்பாற்றிக் கொள்வதற்குப் போதுமானதல்ல. அவர் சீனாவுடன் நெருங்கிச் செல்வதற்கான வாய்ப்புகளை மறுக்கத் தயாராக இல்லை.

அடுத்த மாதம் ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், அவர் மேற்குலகின் மீது விமர்சனங்களை முன்வைக்கத் தலைப்பட்டிருக்கிறார்.

இது சீனாவின் கவனத்தை ஈர்க்கும் செயலாக மாத்திரம் கவனிக்கப்படவில்லை. மேற்குலகத்தை ஏன் அவர் சீண்ட முற்படுகிறார் என்ற கேள்வியையும் எழுப்பியிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்த பின்னர் மேற்குலகம் சாதகமாகவே அணுகியது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைத்ததுடன் அதற்கு தேவையான புறச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்ததும் மேற்குலகம் தான்.

ஆனாலும் சீனாவிடம் பெறப்பட்டிருக்கின்ற கடன்கள் அரசாங்கத்துக்கு இன்னமும் அச்சுறுத்தலாகவே இருக்கிறது.

துக் கொள்வதை தவிர்க்கவே ரணில் விக்கிரமசிங்க முற்படுகிறார்.

சீனா தொடர்புடைய சர்வதேச விவகாரங்கள், சர்ச்சைகளில், சீனாவின் மனதை நோகடிக்கும் எந்த காரியத்தையும் செய்வதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. ஒரே சீனா என்ற கொள்கையை அரசாங்கம் அவ்வப்போது அழுத்திக் கூறி வருவதன் மூலம், தாய்வான் மீதான சீனாவின் ஆக்கிரமிப்பு முயற்சிகளுக்கு கொழும்பு

பசுபிக் மற்றும் இந்து சமுத்திரங்களை இணைத்த அந்தப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் அமெரிக்கா தனது ஆதிக்கத்தை பாதுகாத்துக் கொள்வதற்கு முற்படுகிறது. இவ்வாறான நிலையில் ரணில் விக்கிரமசிங்க இந்தோ- பசுபிக் என்பதை கேலி செய்யும் விதத்தில் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

அவ்வாறான ஒரு கட்டமைப்பு இல்லை என்றும் (15ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
“இணுவில் திருவூர்”
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இனப்பிரச்சனைக்கான தீர்வு:- அரச இறைமைக்குள் கட்டுப்படுத்தும் சிபார்சுகளுடன் இந்தியாவும்



கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– T.K.கணேசலிங்கம் –

தென் இலங்கை அரசியலில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதிபலிப்பு முடிவுக்கு வராத நிலையில் ஜெனீவா அரசியல் நிகழ்ந்துள்ளது. அதனால் ஜெனீவா அரசியல் அதிக முக்கியத்துவத்தை கொண்டிராத போதும் அங்கும் தென் இலங்கைக்கு ஆதரவான அரசியல் களம் ஒன்றின் நிலை காணப்படுகிறதை அவதானிக்க முடியும்.

அதில் இந்தியாவும் சீனாவும் தென் இலங்கை அரசியலை பாதுகாப்பதில் முனை ஷப்புச் செலுத்தியுள்ளன. ஆனால் அதில் இந்தியாவின் நகர்வு ஈழத்தமிழர் அரசியலை அதிகம் மையப்படுத்தியே உள்ளது. சீனாவின் அணுகுமுறை தென் இலங்கையை முழுமையாக பாதுகாக்கும் விடயங்களில் கவனம் கொண்டுள்ளது. இக்கட்டுரை ஜெனீவா அரசியல் அரங்கின் யதார்த்தத்தை தேடுவதாக அமைந்துள்ளது.

கடந்த 04.09.2023 இல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 54வது கூட்டத்தொடர் நிகழ்ந்துள்ளது. அன்றைய தினம் இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் மனித உரிமைப் பேரவையின் பிரதி ஆணையாளர் நாடாஅல்-நஷீப் தலைமையில் நாடுகளின் பிரதிநிதிகள் உரை நிகழ்ந்துள்ளது. அதில் இந்தியா மற்றும் சீனப் பிரதிநிதிகள் உரையாற்றியிருந்தனர். அந்த உரையின் ஐ.நா வின் இந்தியப் பிரதிநிதி உரையாற்றியிருந்தார். அவரது உரையின் உள்ளடக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது. இலங்கையின் அயல்நாடு மற்றும் நெருங்கிய நட்பு நாடு என்ற ரீதியில் கடந்த 2009 இல் தொடக்கம் நிவாரணம், புனர்வாழ்வளித்தல் மீள்குடியேற்றம், மிளக் கட்டியெழுப்புதல் என முன்னிறுத்திய இலங்கையின் முயற்சிகளுக்கு இந்தியா தொடர்ச்சியான ஆதரவை வழங்கி வருகிறது. அது மாத்திரமன்றி இலங்கை சமகாலத்தில் முகங் கொடுத்து வரும் பொருளாதார நெருக்கடியை உரியவாறு கையாள்வதற்கு சுமார் 400 கோடி அமெரிக்க டொலருக்கு மேற்பட்ட பெறுமதியுடைய உதவிகளை வழங்கியிருக்கிறது.

இந்தியா எப்போதும் இரண்டு அடிப்படைக் கொள்கையின் பிரகாரமே செயல்பட்டு வருகிறது. ஒன்று, நீதி சமத்துவம், கௌரவம், சமாதானத்திற்கான தமிழ் மக்களின் அபிலாசைக்கு ஆதரவளிப்பது. இரண்டு, இலங்கையின் இறையாண்மை, ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாப்பது என்பதாகும்.

இதனை பூர்த்தி செய்யும் விதத்தில் அரசியலமைப்பின் 13வது திருத்தத்தினை அமுல்படுத்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தலை நடத்துதல் ஆகிய கடப்பாடுகளை நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கிறோம் எனத் தெரிவித்தார். இதனை நிறைவேற்ற இலங்கை அரசாங்கம் வழங்கி வரும் உத்தரவாதங்களை கவனத்தில் கொள்ளும் அதேவேளை அடையாளப்படுத்தப்பட்டுள்ள முன்னேற்றங்கள் போதுமானவையில்லை. எனவே அர்த்தபூர்வமான நடவடிக்கையை முன்னெடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தை கேட்டுக் கொள்வதாக மணி பாண்டே தெரிவித்துள்ளார்.

இதில் இரு பிரதான விடயங்கள் ஈழத் தமிழர் புரிந்து கொள்ள வேண்டும். ஒன்று இலங்கையின் இறையாண்மையும், ஒருமைப்பாடும் இந்தியாவால் முதன்மைப்படுத்தப்படுகிறது. அதனை எல்லாக்காலத்திலும் இந்தியா பாதுகாத்து வருகிறது. குறிப்பாக 1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி. எழுச்சி ஏற்பட்ட போதும் பின்னர் 1980 களுக்கு பின்னர் ஈழவிடுதலை ஆயுதப் போராட்டங்கள் எழுச்சி பெற்ற போதும் இந்தியாவே இலங்கையின் இறையாண்மையை பாதுகாத்தது என புரிந்து கொள்ள முடியும். 2009 கள் அதன் உச்ச வளர்ச்சியடைந்த காலமாக அமைந்திருந்தது. இதற்கு அமைவாகவே பதின்மூன்று பற்றிய உரையாடலை முதன்மைப்படுத்துகிறது. அதனாலேயே இலங்கைத் தீவின் இறைமையும் ஒருமைப்பாடும் பாதுகாக்கப்படுமென இந்தியா கருதுகிறது. இரண்டு, அதே நேரம் இலங்கைத் தமிழரது இன ரீதியான பிரச்சினைக்கு இந்தியா கருதுவது போன்ற இறைமையும் ஒருமைப்பாடும் கொண்ட இலங்கைத்தீவுக்குள் தீர்வை எட்ட முடியுமா என்ற கேள்வி தமிழர் தரப்பிடம் அதிக காலமாக உண்டு. அதற்கான கோரிக்கைகள் 1949 இலிருந்து தமிழர் தரப்பிடம் காணப்படுகிறது. இறைமையும், ஒருமைப்பாடும் ஈழத்தமிழரது கோரிக்கையினால் மட்டுமே காணாமல் போகிறதா என்ற கேள்வி நியாயமானதாகவே தெரிகிறது.

காரணம் ஈழத்தமிழர் சமஷ்டிக் கோரிக்கையை மிக நீண்டகாலமாக முன்வைத்து வருகின்றனர். ஆயுதப் போராட்டம் எழுச்சியடைந்த போது தனிநாட்டுக் கோரிக்கை பலமடைந்தது. ஆனால் சுதந்திர காலத்திலிருந்து சமஷ்டியானது ஒரு ஆக்கபூர்வமான தீர்வாக அமையும் என்ற உரையாடல் தமிழர் மத்தியில் உண்டு.

உலக நடைமுறையும் அதன் புலமையும் இனரீதியான பிரச்சினைகளுக்கு தீர்வாக சமஷ்டியை தேர்வு செய்து செயல்படுத்தி வருகிறது. சமஷ்டியில் ஒரு தேசத்தின் ,றைமை பலவீனப்படுத்தப்படுகிறது எனக் கருதும் நிலை ஏற்பட்டால் உலகளாவிய ரீதியில் ஆயிரக்கணக்கான நாடுகள் ஐ.நா. சபையின் அங்கத்துவ நாடுகளாக காணப்படும் நிலை ஏற்பட்டிருக்கும். அது மட்டுமல்ல இலங்கைத் தீவின் இறைமை பாதுகாக்கப்படுவதென்பது அதன் மீதான ஆக்கிரமிப்பினையும் அந்நிய சக்திகளின் தலையீட்டையும் பொருளாதார பண்பாட்டு இறைமையும் பாதுகாப்பதாக அமைய வேண்டும். ஏற்கனவே இலங்கைத்தீவு சீனா, இந்தியா, அமெரிக்காவினால் பங்கு போடப்படுவதாக அரசியல்வாதிகள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் கொழும்பு துறைமுக நகரத் திட்டமிடல்கள் அனைத்துமே இலங்கையின் ,றைமை சார்ந்த கேள்வியை எழுப்புகிறது. இலங்கை ஒரு இறைமை படைத்த நாடு என்ற நியதியை இத்தகைய விடயங்கள் எந்தளவுக்கு பாதித்துள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இதனால் இலங்கையின் ஒரு மைப்பாடு பேணப்படுகிறதா என்பது முக்கியமான உரையாடலாக உள்ளது.

இங்கு அரசியல் இறைமை பற்றிய உரையாடலே முதன்மையானதாக உள்ளதே அன்றி ஏனைய விடயங்கள் முதன்மைப்படுத்தப்படுவதில்லை. 1453 இல் ஐரோப்பிய அரசுகளால் மேற் கொள்ளப்பட்ட வெஸ்பாலிய உடன்பாட்டின் கீழேயே தேசியங்களின் இறைமை வரையறுக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. தேசியங்களின் இருப்பினால் தேசங்கள் கட்டமைக்கப்பட்டு அத்தகைய தேசங்களின் வளங்கள் பாதுகாக்கப்படுவதே உடன்பாட்டின் இலக்காக இருந்தது. அதுவே தேசிய அரசின் உதயமும் இருப் புமாகும். அதனாலேயே வெஸ்பாலியா ஐரோப்பிய வரலாற்றில் முதன்மையானதாக கருதப்படுகிறது. ஆனால் அதன் வளர்ச்சிக் கட்டத்திலேயே இன்றைய அரசறிவியல் உலகம் உள்ளது. அமெரிக்கா ஐக்கிய அமெரிக்காவாக கட்டமைக்கப்பட்டது. அதனை அடியெற்றி ஐரோப்பாவிலும் ஏனைய கண்டங்களிலும் சமஷ்டி மாதிரி இனப்பிரச்சினைகளுக்கு வலுவான தீர்வாக அமைந்திருந்தது. இவை எதுவும் சாத்தியமற்ற போதே பிரிவினை ஒரு தீர்வாக உலகளாவிய ரீதியில் முன்மொழியப்படுகிறது. இது மக்கள் இறைமையின் சகாப்தமாகும். இதன் பால்பட்டே தேசியங்களும், தேசங்களும் கட்டமைக்கப்பட்டு வருகிறது. இறைமையும், ஒருமைப்பாடும் மக்கள் சார்ந்ததே அன்றி அரசுகள் சார்ந்தது மட்டுமல்ல.

மறு பக்கத்தில் சீனாவின் ஐ.நா.பிரதி நிதி உரையாற்றும் போது இலங்கையின் மனித உரிமையை பாதுகாப்பதாலும் மேம்படுத்துவதிலும் 51-1 தீர்மானம் பக்கச்சார்பற்ற வகிபாகத்தைக் கொண்டிருக்கவில்லை எனவும் நல்லிணக்கம் மீளக் கட்டியெழுப்புதல், பயங்கரவாதத்தை தோற்றடித்தல், நலிவடைந்த மக்களின் உரிமையை பாதுகாத்தல், பொருளாதார மீட்சி மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் என்பவற்றில் இலங்கை மேற்கொண்டு வரும் முயற்சிகளை பாராட்டுவதாக தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிடும் போது, ஐ.நா. மனித உரிமைப் பேரவை நாடுகளின் இறையாண்மை மற்றும் அரசியல் சுயாதீனத்திற்கு மதிப்பளிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

இது தென் இலங்கையை வெளிப்படையின் அனைத்து வகை அரசியலையும் ஆதரிப்பதாக உள்ளது. அதுவே சீனாவுக்கான நிலைப்பாடாகும். காரணம் சீனா அரசியல் இறைமையை மட்டும் வலியுறுத்தும் நாடு. அதிலும் அரச இறைமையை மட்டம் கொண்ட நாடு. ஆனால் இந்தியா மக்கள் இறைமைக்குள்ளால் ஆளப்படும் நிலைப்பாட்டை கொண்டது. ,ரண்டுமே இலங்கைத்தீவின் அரசியலில் ஒரே வரையறையைக் கொண்டுள்ள நாடுகளாகவே உள்ளதாகவே தெரிகிறது. அடிப்படையில் இறைமை சார்ந்து இரு நாட்டுப் பிரதிநிதிகளும் ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் (22ம் பக்கம் பார்க்க)





# முற்றிலும் இலவசம்! CSI இன் மின்னியல் தொழில்நுட்ப 4 மாத பயிற்சி திட்டம் ஆரம்பம்

கனடா, மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்களில் உள்ள வேலைப் பற்றாக்குறை, வேலைக்குத் தயாராக இருக்கும் பணியாளர்களை உருவாக்குவதற்கான அதி நவீன பயிற்சிகளை வழங்குவதற்கு உயர் தகுதி வாய்ந்த முதலாளிகளுடன் கூட்டுச் சேர்வதற்கு ஒரு மூலோபாய முடிவை எடுத்தது.

அதன் ஒரு அங்கமாக CSI தொழிலாளர், குடிவரவு, பயிற்சி அமைச்சகத்துடன் (Ministry of Labour Immigration Training and Skills Development [MLITSD] கூட்டு சேர்ந்துள்ளது.

மற்றும் திறன் மேம்பாடு (MLITSD) 'ஸ்கார்பரோ தொழில்நுட்ப அறிவை வழங்க ஹப் புரோகிராம்', கல்வி, பயிற்சி, எலக்ட்ரானிக் டெக்னாலஜி துறையில் வேலைக்குத் தயாராக உள்ள பங்கேற்பாளர்களை உருவாக்கவும்

CSI அதன் அதிநவீன வசதி கொண்ட பயிற்சி ஆய்வுகூடம், மற்றும் இந்த 4-மாத திட்டத்தின் மூலம் நடைமுறை அனுபவத்தை வழங்கும் திறனுக்காகவும் மற்றும் 33 ஆண்டுகளாக இத் துறையில் அனுபவம் கொண்ட CSI, அதன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டது.

சமூகப் பொறுப்பாளர் என்ற வகையிலும் மற்றும் பரோபகாரம் மீதான CSI இன் ஆர்வத்தின் தொடர்ச்சியாக, இந்தத் திட்டம் அரசாங்கத்தின் இலக்குகளுக்கு சாதகமான பங்களிப்பையும் செய்து சிறந்த பயிற்சி பெற்ற பணியாளர்களை உருவாக்கவும் CSI தன் பங்களிப்பை செய்யவுள்ளது. இந்த மாணவர்களை அர்த்தமுள்ள கோட்பாட்டு மற்றும் பயிற்சி அமர்வுகளுக்கு உட்படுத்துவதற்காக CSI ஒரு நவீன வகுப்பறை மற்றும் உலகத்தரம் வாய்ந்த உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தையும் அமைத்துள்ளது.

மற்றும் திறன் மேம்பாடு (MLITSD) 'ஸ்கார்பரோ தொழில்நுட்ப அறிவை வழங்க ஹப் புரோகிராம்', கல்வி, பயிற்சி, எலக்ட்ரானிக் டெக்னாலஜி துறையில் வேலைக்குத் தயாராக உள்ள பணியாளர்களை உருவாக்கவும் இச் செயல்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

சிக்கலான சர்க்யூட் போர்டுகளை சரி செய்து, செயல்படுத்துதல் அவர்களை திறமையான மின்னணு தொழில்நுட்ப வல்லுனர்களாக பயிற்றுவிக்க வேண்டும் என்பதற்காக இந்த 4 மாத பகுதி நேர பயிற்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த இலவச பயிற்சி மூலம் பலர் குறிப்பாக கனடா நாட்டுக்கு புதிதாக வருபவர்கள், வளரும் அடுத்த சந்ததியினர் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது. நாட்டில் தொழிற்சந்தையில் மின்னியல் துறைகளில் ஆளணி வளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும் இந்த பயிற்சிகள் பெரிதும் உதவும்.

MLITSD பயிற்சி திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:

இன்றைய கால கட்டத்தில் தொழில்நுட்ப மாற்றத்திற்கேற்ப கனடாவுக்கு தேவையான உள்நாட்டு பணியாளர்களை உருவாக்குதல்.

பணியிடத்தில் நுழைவதில் அதிக தடைகளை எதிர்கொள்ளும் வேலை தேடுபவர்களுக்கு வழி வகுத்தல்.

வளர்ந்து வரும் தொழிலாளர் சந்தை தேவைகளைப் பூர்த்தி செய்ய நிகழ் நேர முதலாளிகளுடன் கூட்டுசேர்தல்.

CSI மின்னியல் தொழில்நுட்ப நான்கு மாத பயிற்சி திட்டம் முற்றிலும் இலவசம்.

அதி நவீனத்தில் நடைமுறைப் பயிற்சி வசதி. பயிற்சி முடிவில் சான்றிதல். வேலை வாய்ப்பு உதவி.






CSI

# CSI இலத்திரனியல் தொழிநுட்பப் பயிற்சி

## இலவச பயிற்சி வழங்கப்படுகிறது

Canada | EMPLOYMENT ONTARIO | Ontario

SCAN TO REGISTER

தொழில் அமைச்சு, குடிவரவு, பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு (MLITSD) ஆகியவற்றுடன் இணைந்து CSI **'ஸ்காபரோ ஹப்' நிகழ்ச்சித் திட்டம்'** முன்னெடுக்கப்படுகிறது.

இலத்திரனியல் தொழிநுட்ப துறையில் பயிற்சி அளித்து வேலைபாய்ப்புக்குத் தயாராகும் விதத்தில் அதி நவீன நடைமுறைப் பயிற்சியுடனான கல்வித் திட்டம்.

சிக்கலான சர்க்யூட் போர்டுகளை எவ்வாறு பொருத்துவது, பழுதைக் கண்டறிவது, சரி பார்ப்பது மற்றும் திருத்துவைத்து பற்றிய அறிவைப் பங்கேற்பாளர்கள் பெறுவார்கள்.




**இந்நிகழ்ச்சித் திட்டம் MLITSD இன் முக்கிய நோக்கோடு ஏற்புடையதாகும்:**

- வேகமாக மாறி வரும் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப அதை எதிர்கொள்ளக் கூடிய பணியாளர்களை உருவாக்குதல்
- வேலை தேடுபவர்களுக்கு பணி நுழைவுக்கான தடைகள் நீக்க வழி வகுத்தல்
- அதிகரித்து வரும் தொழிலாளர் சந்தையின் தேவைகளை சந்திக்க வேலை வழங்குவோருடன் நேரடியாக கூட்டுச் சேர்த்தல்

## CSI இலத்திரனியல் தொழிநுட்பப் பயிற்சி

**இலவச பயிற்சி வழங்கப்படுகிறது**


- 4-மாத பாடத் திடடம்
- எங்கள் அதிநவீனத்தில் பயிற்சி கூடத்தில் நடைமுறைப் பயிற்சி
- வேலைவாய்ப்பு உதவி



மேலும் விவரங்கள் அறிய மற்றும் விண்ணப்பிக்க:

https://www.thecsi.com/skills-development-program.html


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எதிலும் தெளிவான சிந்தனை இருக்கும். மனதில் இருந்த வீண்கவலை கள் நீங்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் இருந்த முட்டுக்கட்டைகள் நீங்கும். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்கள் மூலம் நன்மை உண்டாகும். வியாபாரத்திற்கு தேவை யான நிதி உதவியும் கிடைக்கும். உத்தி யோகஸ்தர்களுக்கு தற்காலிக பதவி உயர்வு, கூடுதல் பொறுப்புகள் கிடைக்க பெறலாம்.





ரிஷபராசி அன்பர்களே! எதிர் பார்த்த நல்ல செயல்கள் நடக் கும். கடன் பிரச்னைகள் தொல்லை தராமல் இருக்கும். உங்களது செயல்களுக்கு இருந்த எதிர்ப்பு கள் நீங்கும். வழக்கு விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும். எதிர் பார்த்த பணவரத்து இருந்தாலும் வியா பாரம் தொடர்பான செலவுகள் கூடும். போட்டிகள் தொல்லை தராமல் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பணிசுமை குறைந்து காணப்படுவர்.





மிதுனராசி அன்பர்களே! சாமர் த்தியமாக பேசி காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர் கள். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நன்மையாக இருக்கும். பூர்வீக சொத்து க்களில் இருந்த தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக் கும். பார்ட்னர்கள் ஒத்துழைப்புடன் வியா பாரத்தை விரிவாக்கம் செய்வீர்கள். ஏற்றுமதி சம்பந்தமான துறையினருக்கு நல்ல லாபம் கிடைக்கும்.





கடகராசி அன்பர்களே! சுபகாரிய ங்களில் கலந்து கொள்வீர்கள். இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக முடியும். தேவையற்ற கவலைகள் நீங்கும். உங்களை பற்றி விமர்சனம் செய்து வந்தவர்கள் அதனை விட்டு விடுவர். தொழில் வியா பாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். கடன் பிரச்னை தீரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் எளிதாக பணிகளை செய்து முடிப்பர். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.





சிம்மராசி அன்பர்களே! துணிச் சலாக எதையும் செய்து முடிப் பீர்கள். பூர்வீக சொத்துக்களில் இருந்த சிக்கல்கள் தீரும். அரசாங்கம் மூலம் லாபம் உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி விறுவிறுப்படை யும். கடன் பாக்கிகள் வசூலாகும். தொழில் தொடர்பான பிரச்னைகள் தீரும். உத்தி யோகத்தில் பணிக் கஷ்டங்கள் குறையும்.




கன்னிராசி அன்பர்களே! நினை த்த காரியம் நிறைவேறும். எதையும் மனோ தைரியத்து டன் செய்து முடிப்பீர்கள். வீடு தொடர்பான பணிகள் விரைந்து நடக் கும். நெருக்கடியான நேரத்தில் எதிர் பார் த்த உதவிகள் கிடைக்கும். தொழில் வியா பாரத்தில் லாபம் உண்டாகும். எதிர் பார் த்த நிதி உதவி கிடைக்கும். உத்தியோக ஸ்தர்கள் இடமாற்றம் பற்றி ஆலோசிப் பர்.குடும்பத்தில் இருந்த இறுக்கமான சூழ் நிலை மாறி மகிழ்ச்சியான நிலை வரும்.




துலாம் ராசி அன்பர்களே! எதி லும் அவசரப்படாமல் நிதான மாக முடிவு எடுப்பது நன்மை தரும். மனதில் இருந்த கவலை கள் நீங்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைத்தாலும் செல வும் அதிகரிக்கும். புதிய ஆர்டர்கள் பெறு வதற்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டி இருக்கும். உத்யோகத்தில் தயக் கத்துடன் தங்களது பணிகளை செய்ய வேண்டி இருக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இதமான சூழ் நிலை நிலவும்.





விருச்சிகராசி அன்பர்களே! கொடுத்த வாக்கை காப்பாற்று வதில் கடும் முயற்சிக்குப் பின் வெற்றி கிடைக்கும். வீடு, வாக னம் போன்றவற்றை புதுப்பீர்கள். மனோ தைரியம் அதிகரிக்கும். தொழில் வியாபார த்தில் இருந்த மந்தநிலை மாறும். புதிய ஆர்டர்கள் வந்து சேரும். உத்யோகத்தில் திறமையாக பணிகளை செய்து பாராட்டு பெறுவர். பதவி உயர்வும் கிடைக்கும். குடு ம்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன், மனை விக்கிடையில் நெருக்கம் அதிகரிக்கும்.








தனுசராசி அன்பர்களே! எடுத்த காரியங்கள் வெற்றிகரமாக நட க்கும். வீண்கவலை நீங்கும். ஆன்மிக எண்ணங்கள் அதிக ரிக்கும். துணிச்சலாக எதிலும் ஈடுபடுவீர் கள். தொழில் வியாபாரம் விருத்தி யடையும். ஏற்கனவே வரவேண்டி இரு ந்து வராமல் நின்ற ஆர்டர்கள் வந்து சேரும். உத்யோகத்தில் வேலை பளு, வீண் அலைச்சல் குறையும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் குறையும். புதிய வீடு வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.




மகரராசி அன்பர்களே! மனதில் இருந்த கவலைகள் நீங்கி நிம் மதி உண்டாகும். வர வேண் டிய பணம் வந்து சேரும். சாம ர்த்தியமான பேச்சினால் காரிய ங்களில் சாதகமான பலன் கிடைக்கும். அடிக்கடி கனவுகள் வரக்கூடும். தொழில் வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதக மான பலன் தரும். உத்யோகத்தில் இருப் பவர்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடி த்து மனநிறைவு அடைவர். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கும்.




கும்பராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக நடந்து முடி யும். நோய் நீங்கி உடல் ஆரோக் கியம் உண்டாகும். தந்தை மூலம் செலவு உண்டாகலாம். வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம். தொழில் வியாபாரத்தில் எதிர் பார்த்த லாபம் கிடைக்கும். புதிய தொழில் தொடங்க எடுக்கும் முயற்சிகளில் சாதக மான நிலை காணப்படும் குடும்பத்தில் பிரச்சனை தலைதூக்கி பின்னர் சரியாகும்.




மீனராசி அன்பர்களே! மனம் மகிழும் சம்பவங்கள் நடை பெறும். உடல் ஆரோக்கியத்தை தரும். வீண் கவலை நீங்கும். தடைபட்ட காரியங்களில் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். வழக்கு விவ காரங்களில் சாதகமான நிலை காணப்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங் களில் இருந்த தடைகள் விலகும். போட்டி கள் குறையும். குடும்பத்தில் இருப்பவர் களுடன் இணக்கமான போக்கு காணப் படும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# தமிழர் அரசியல்

(16ம் பக்கத்தொடர்ச்சி) முழுச் செயற் பாட்டுக்குரியது. அரசியல் என்பது வளர்ந்து செல்லும் பண்பாடு. அரசியல் என்பது வெற்றி தோல்விகளில் படிக்கும் பாடத்தின் அடிப்படையில் முன்னேறிச் செல்வது. அரசியல் என்பது கட்சிகளு க்கோ தலைவர்களுக்கோ இல்லாது, மக்களுக்கானது. அரசியல் என்பது, விருப்பங்களையும் நடைமுறைகளையும் இணைத்துச் செல்வது. அரசியல் என்பது சத்தியமானது. இத்தகைய புரிதலோடும் அறிவொழுக்கத்தோடும் இதை முன்னெ டுக்க வேண்டும்.

அதாவது, இலங்கையின் பின்னடைவுகளி லிருந்து இலங்கையை மீட்கக் கூடிய அரசியல் இது. இலங்கைச் சமூகங்களின் பிளவுகளிலிருந்தும் காப்பாற்றி ஒருங்கி ணைவை வழங்கக் கூடியது. ஒவ்வொரு சமூகத்தையும் அதன் சுயம், அடையாளம் தனித்துவம், முன்னேற்றம், சமநிலை ஆகியவற்றில் நிறைவாகத் தக்க வைப் பது.

அப்படியென்றால் இந்த அடிப்படையில் சிந்திக்கக் கூடிய தரப்பை மக்கள் தேர்ந்து ஆதரிக்க வேண்டுமே!நிச்சயமாக இந்தக் கேள்வி நியாயமானதே. ஆனால் துரதிரு ஸ்டவசமாக மக்கள் அவர்களை அறியா மல் இனவாதத்தினால் கட்டமைக்கப் பட்டுள்ளனர். என்பதால் அவர்களால் அதைக் கடந்து சிந்திக்க முடியாது.

உண்மை எவ்வளவு பிரகாசமாக இருந் தாலும் அறிவு குருடாகி விட்டால் அதைக் கண்டுணர முடியாது. இது மிகத் துயரமான நிலையே. இதில் இன் னும் துயரமானது படித்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் புத்திஜீவிகளும் அரசியல் ஆய்வாளர்களும் கூட இதைப் புரிந்து கொள்ள மறுக்கும் அளவுக்கு அவர்களும் இனவாத நரம்புகளால் பாதிக்க ப்பட்டுள்ளனர்.

இவர்கள் மிக மலிவான, ஒரு கறிக்குப் பயன்படும் ஒரு எலுமிச்சம் பழத்தை வாங்கும் போது கூட அதன் தரத்தைக் கவனமாகப் பரிசீலிப்பார்கள். ஒரு கீரைப் பிடியை வாங்க வேணும் என்றால் கூட அது வாடியிருக்கிறதா? இலைகள் கொட் டிருக்கின்றனவா, நன்றாக உள்ளனவா? முற்றியிருக்கிறதா? என்றெல்லாம் மிகக் கவனமாக ஆராய்வார்கள்.

அப்படி மிகச் சிறிய பொருட்களில் தொட ங்கி காணி வாங்குவது, கார் வாங்குவது, திருமண உறவுகளைத் தேர்வது, சீட்டுப் பிடிக்கும் போது கூட நம்பிக்கையானரா என்பது வரை எல்லாவற்றிலும் தரத்தை யும் உத்தரவாதத்தையும் பார்க்கின்றவர் கள், அரசியலில் மட்டும் மொண்ணைத் தனமாக தேர்வைச் செய்கிறார்கள். அரசியல் ஒரு அறிவியக்க வெளிப்பாடு என்று உணராமல், உணர்ச்சி வசப்பட்ட, நட்பு, உறவு, சாதி, இனம், மதம், பிரதேசம் என்ற வகையில் தேர்கிறார்கள்.

தேர்வு செய்யப்படுகின்றவரின் அரசியல் அறிவு, துறைசார் நிபுணத்துவம், மக்கள் மீதான கரிசனை, பண்பு, செயற்பாட்டுத் திறன், உலக அரசியல் அவர் செலுத்தக் கூடிய செல்வாக்கு, கடந்த காலத்திலும் தற்போதும் குறித்த நபர் அல்லது நபர்கள் செய்த, செய்து வரும் அரசியல், சமூகப் பங்களிப்புகள் போன்றவற்றைப் பற்றிய எந்த மதிப்பீடும் இல்லாமல் அறிவுக்(?) கண்களை மூடிக் கொண்டு ஆதரித்து விடுகிறார்கள்.

மேலும் ஒன்றைச் சொல்லலாம். புதிய செல்போனை வாங்குகிறோம். புதிய காரை, புதிய செருப்பை, புதிய உடைகளை, புதிய பொருட்களை எல்லாம் வாங்கு கிறோம். புதியவை தரமானவை. New Vertion என்பது முன்பிருந்ததையும் விட எப்போதும் யுனயஉெந ஆக இருக்கும் என்று நம்புகிறோம். அது உண்மையும் கூட.

இவற்றில் நாம் காண முற்படும் பொது அம்சம் என்னவென்றால், புதியவை வேக மும் தரமும் பல்பயன்பாடும் இருக்கும் என்பதால். கூடவே இலகுத் தன்மையும் உள்ளது என்பதாகும். ஆனால் அரசிய லில்? அரசியலில் இதற்கு மாறாகவே மக்கள் சிந்திக்கிறார்கள். செயற்படுகிறார் கள். தோற்றுப் போன, வெற்றிகளையே தராத அரசியல் தரப்புகளை ஆதரிப்பவர் களாக இருக்கிறோம்!

இது ஏன்? தாம் பழகியவற்றிலிருந்து கட ந்து புதிய பிரவேசத்துக்குள் நுழைவதற் குப் பதற்றப்படுகிறார்கள். பயங்கொள்கிறார் கள். காரணம், இனவாதமே. மீறிச் சென் றால் தாம் தனித்து விடுவோம் என்று அச்சமடைகிறார்கள்.

ஆகவே தான் இந்த அரசியலை முன்னெ டுப்பது இலகுவானதல்ல என்ற நிலை உள்ளது.

ஏனென்றால் மக்கள் வழமையான பாரம் பரியமான அரசியல் வழிமுறையின் வழியே நடந்து பழக்கப்பட்டவர்கள். இந்த இரண்டக நிலையில்தான் தமிழ்ச்சமூகம் சிக்குண்டுள்ளது. தமிழ்ச் சமூகம் மட்டு மல்ல, சிங்களச் சமூகமும்தான். சுயமாகச் சிந்திக்காத வரையில் எல்லாமே பிரச்சினை தான்.

# இனப்பிரச்சனைக்கான தீர்வு

(19ம் பக்கத் தொடர்ச்சி) ஆற்றிய உரைகள் ஒன்றாகவே தெரிகிறது. அது மட்டுமல்லாது இந்தியா தொடர்ச்சியாக மேற்குறித்த உரையாடலையே அதிக காலமாக மேற்கொண்டு வருகிறது. அதில் எந்த மாற்றமும் நிகழ்ந்ததாக தெரிய வில்லை. அப்படியாயின் இந்திய பிராந்திய அரசியலைப் பற்றி மட்டுமே கருத்தில் கொண்டு நகர்வதாகவே புரிந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசியலுக்குள் இனப்பிரச் சினை குறித்து மாற்றம் ஏற்படும் என்ப தில் சம காலம் தெளிவான புரிதல்களைத் தந்துள்ளது. இதனை இந்தியத் தரப்பு புரிந்து கொள்ளத் தவறுவதும் அதன் விளைவுகளே இலங்கைத்தீவின் சீனா போன்ற வல்லரசுகளது நகர்வுகள் அதி தீவிரமாக அமைவதையும் கண்டு கொள்ள முடிகிறது. சீனாவின் தீவிர தலையீடு இலங்கைத் தீவின் இறைமை யில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற உரையாடலை தமிழ் அரசியல்வாதிகள் முன்வைத்து வருகின்றன. அதுவே அனேக புலமையாளர் மத்தியிலும் காண ப்படுகிறது.

அப்போது இலங்கை ஒருமைப்பாடு இறைமை பற்றிய புரிதல் தெளிவாக அமைய வாய்ப்புள்ளதாகவே தென்படு கிறது. பிராந்திய சர்வதேச நலன்களுக்கு ள்ளால் ஈழத்தமிழரது அரசியலுக்கான தீர்வும் கோரிக்கையும் நகர்கிறது என்பது மட்டுமே தற்போதைக்கு பொருத்தப் பட்டனதாக அமையும்.

எனவே ஜெனீவா அரங்கில் நிகழ்ந்து வரும் அரசியல் மாற்றங்கள் அதிக மான உரையாடலை ஈழத்தமிழரது தீர்வில் ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவும் சீனாவும் பயணிக்கும் திசையை கணக்கிட்டுக் கொள்வதற்கும் தென் இலங்கையின் அரசியல் இருப்பினைப் பாதுகாக்கும் தரப்புகளது நிலைப்பாடுகளும் உணர முடிகிறது. இதுவே ஈழத்தமிழரது அரசியல் யதார்த்தமாகும்.

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

*At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

*Pre-Arranging: A Wise Choice...*


**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
HOMELIFE
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


இரா. சம்பந்தனின்
விழியும் துளியும்
சிறுகதைத் தொகுதி வெளியீடு
விழியும் துளியும்
இரா. சம்பந்தன்
ஈழநாடு பதிப்பகம்
சனிக்கிழமை
ஒக்ரோபர் 14, 2023
மாலை 5 மணி
கனடா ஸ்ரீ ஐயப்பன்
ஆலய மண்டபம்
635 Middlefield Rd,
Scarborough
தமிழ் இலக்கிய ஆர்வலர்கள், ஆதரவாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
ஈழநாடு பதிப்பகம்


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய
கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.